₹100/-

ஞானகுரு


# மகிழ்ச்சி

பிப்ரவரி 2022

எஸ்.கே.முருகன்

## மறுஜென்மம் உண்டா..?

## கடவுளை சந்திக்க எளிய வழி..!










# வாழ்க்கை ரகசியம்..!

ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு வாழ்நாள் லட்சியம் அல்லது கனவு இருக்கத்தான் செய்கிறது. குறிப்பாக, செல்வந்தராவது, தொழிலதிபராவது, அரசியல்வாதியாவது, சினிமா கலைஞராவது, பங்களா கட்டுவது, உலகை சுற்றுவது என்பது போன்ற ஏதேனும் ஒன்றை வாழ்நாள் லட்சியமாக வைத்திருப்பார்கள். அப்படி ஆசைப்பட்டதை சாதிப்பதற்காக வாழ்நாள் முழுவதும் இயங்கிக்கொண்டு இருப்பார்கள்.

ஆனால், ஆசைப்பட்டதை எல்லோராலும் அடைய முடிவதில்லை. இன்னும் சொல்லப்போனால் நூற்றுக்கு 99.99 சதவீதம் பேர் அந்த முயற்சியில் வெற்றியைத் தொடுவதில்லை. ஒரு கட்டத்திற்குப் பிறகு, லட்சியம் நிறைவேறவில்லை என்றதும் பெரும் வருத்தத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாகிறார்கள். வாழ்க்கையில் தோல்வி அடைந்துவிட்டதாக நினைத்து, தங்களைத் தாங்களே நொந்துகொள்கிறார்கள்.

ஆசைப்பட்டதை சாதித்த ஒரு சிலரும், மீண்டும் ஒரு இலக்கை நிர்ணயித்து அதை நோக்கி பயணம் செய்கிறார்கள். அதனால், அவர்களும் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதுதான் வாழ்க்கையா..?

இல்லை. வாழ்க்கையின் நோக்கம் வாழ்தல் மட்டுமே. அதாவது, பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான காலத்தை முழு மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதுதான் வாழ்க்கை.. வாழ்க்கையை இனிமையாக கழிப்பதற்கு செல்வம், புகழ், உறவு, ஆரோக்கியம் என எதுவுமே அவசியம் இல்லை. எது இல்லையோ அதற்காக கவலைப்படாமல், எது இருக்கிறதோ அதை கொண்டாடுவதுதான் வாழ்க்கை.

அப்படியென்றால் கடினமான சாதனைகள் படைப்பது முட்டாள்தனமா? இல்லவே இல்லை. ஒரு வேலையை ரசித்து, மகிழ்ச்சியான மனநிலையில் செய்பவரால் மட்டுமே மாபெரும் சாதனைகளை படைக்க முடியும். அவருக்கு அதுதான் வாழ்க்கை.

வெற்றி, தோல்வியைப் பற்றி கவலைப்படாத மகிழ்ச்சியுடன் சிறுவர்கள் விளையாடுவதைப் பார்த்ததுண்டா..? எந்த எதிர்பார்ப்பும் இல்லாத அந்த கொண்டாட்டம்தான் வாழ்க்கை. அப்படித்தான் பிற உயிரினங்கள் வாழ்கின்றன.

இரவு – பகல், வெற்றி – தோல்வி, மகிழ்ச்சி – வருத்தம் ஆகிய எதுவும் நிரந்தரமில்லை என்பதை புரிந்துகொள்ளும் மனிதனால் மட்டுமே, வாழ்க்கையின் நோக்கம் வாழ்வதுதான் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

ஆசிரியர்

# உடம்பை காதல் செய்



சந்தன நிறம், அலைபாயும் கூந்தல், காந்தக் கண்கள், கன்னக்குழி போன்ற பல அழகம்சம் கொண்ட இளமதிக்கு தீராத கவலை ஒன்று உண்டு. அது, வலது கையில் முளைத்துள்ள ஆறாவது சுண்டு விரல்.

வலது கை சுண்டுவிரலுக்கு இலவச இணைப்பு போன்று குட்டி விரல் ஒன்று துருத்திக்கொண்டு நிற்கிறது. வலி, வேதனை போன்ற எந்தத் தொந்தரவும் கொடுக்காத சமர்த்துப் பிள்ளையாக ஒட்டிக்கொண்டு இருந்தாலும், இளமதிக்கு அந்த விரலை சுத்தமாகப் பிடிக்கவே இல்லை.

தன் அழகுக்கு இடைஞ்சலாக அந்த விரலை நினைத்தாள். தெருவில் கடந்துசெல்லும் அத்தனை பேரும் தன் கைவிரலைப் பார்த்து கிண்டல் செய்து சிரிப்பதாகவே இளமதிக்குத் தோன்றும். அது பிரமை என்று யார் சொன்னாலும் இளமதி ஏற்றுக்கொள்வதில்லை. நாலைந்து மருத்துவர்களைப் பார்த்து, அந்த விரலை அகற்றுவது குறித்து விசாரித்துவிட்டாள். நரம்புகளில் சிக்கல் ஏற்பட்டு நிஜ சுண்டுவிரல் பாதிப்படையலாம் என்று தட்டிக் கழித்துவிட்டார்கள். இந்த விஷயத்தில் எல்லா மருத்துவர்களும் தனக்கு எதிராக கூட்டு சதி செய்வதாகவே இளமதி நினைத்தாள்.

இதுவரை யாருக்கும் இளமதி கை கொடுத்தது இல்லை. நாசூக்காக கையை மறைத்தபடியே பேசுவாள். கோயிலுக்குப் போனாலும் கடவுளை மனதுக்குள் வேண்டுவாளே தவிர, கையெடுத்து கும்பிட்டது இல்லை.. நெருங்கிய தோழி சுமித்ராகூட, இவளது சுண்டுவிரல் விஷயத்தை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்வது இளமதியின் பெருங்கவலை. அதனால் யாரிடமும் விரல் வருத்தத்தை பகிர்ந்துகொண்டதில்லை என்றாலும் தினம் ஒரு முறையாவது அந்த விரலைப் பார்த்து வருந்தியிருக்கிறாள்.

இன்றும் இளமதி தனிமையில் அழுகிறாள். அடுத்த வாரம் பெண் பார்க்க ஒருவன் வருகிறான், என்பதுதான் அழுகைக்குக் காரணம்.. விரல் விஷயம் தெரியும் என்று அப்பா சொன்னபிறகும் அவள் கவலை தீரவில்லை. பெண் பார்க்க வரும் ஒவ்வொரு நபரும் தன் விரலை வேடிக்கை பார்ப்பதாக நினைத்து நினைத்து அழுதாள் இளமதி. தன் வருத்தத்தை கொட்டித் தீர்ப்பதற்கு இருட்டுக் கோயிலுக்குப் போனாள். அங்கு தெப்பக்குளத்திடம் தன் வருத்தத்தைச் சொல்லி அழுதபோது, பின்னே ஒருவர் நிற்பது தெரிந்து திரும்பினாள்.

எழுபது வயதைத் தாண்டிய ஒரு கிழம் கம்பீரமாக நின்றது. வேட்டி, சட்டை, தாடி, மீசை எல்லாமே வெள்ளை. சட்டென்று அவள் அருகே அமர்ந்தார்.

“குழந்தை... உன்னுடைய குட்டி சுண்டுவிரலை எனக்குக் கொடுத்துவிடுகிறாயா?” கிழம் கேள்வியில் அதிர்ந்தாள். தெப்பக்குளத்திடம் பேசியதை ஒட்டுக் கேட்டிருக்கிறார் என்றதும் கோபத்துடன் குரல் எழுப்ப முற்பட்டவளை தடுத்து நிறுத்திப் பேசினார்.

“நீ பேசியதை தெப்பக்குளம் கேட்கலாம், நான் கேட்கக்கூடாதா? ஒட்டுக்கேட்ட விவகாரத்தை மறந்துவிடு. உன் குட்டி சுண்டுவிரலை எனக்குக் கொடுத்துவிடுகிறாயா?” மீண்டும் அழுத்தமாக கேள்வி கேட்டார்.

“எனக்கு இந்த விரல் வேண்டாம். ஆனால் எப்படி கொடுக்க முடியும்? வெட்டினால் நிஜ சுண்டுவிரலுக்கு பிரச்னை வரும்...”

“உன் சுண்டுவிரலை நான் மறைய வைக்கிறேன், கவலைப்படாதே” என்று சொன்ன கிழத்தை உற்றுப் பார்த்தாள்.

“நீங்க யாரு... நான் இங்கே உங்களை பார்த்ததே இல்லை...”

‘‘இப்போதைக்கு கடவுள்ன்னு

வைச்சுக்கோ…” என்று கிழம் சிரித்ததும் நெஞ்சுக்குள் கத்தி இறங்கியதைப் போன்று அதிர்ந்தாள் இளமதி.

“நிஜமாவா…?” விருட்டென எழப்போனவள் தோளைப் பிடித்து அமரவைத்தவர், “என்னைப் பற்றிய ஆராய்ச்சி எதற்கு? உன் பிரச்னையை பேசித் தீர்க்கலாம். உன் எக்ஸ்ட்ரா சுண்டுவிரலை மறைய வைத்தால் எனக்கு என்ன தருவாய்?”

“என்ன வேண்டும்?”

“உன் உடலில் தேவையில்லாத ஏதேனும் ஓர் உறுப்பைக் கொடு. இந்த அலைபாயும் கூந்தலாக இருந்தாலும் பரவாயில்லை…” வில்லங்கமாக தெரிந்தது பெரியவர் பேச்சு.

“அதெப்படி… எனக்கு அழகே தலைமுடிதான், அதை எப்படி தரமுடியும்?”

“சரி, யாருக்கும் தெரியாமல் ஒளிந்திருக்கும் உன் கடைவாய்ப் பல் ஒன்றைக் கொடுத்துவிடு, நான் உன் விரலை மறைய வைக்கிறேன்…”

“கடைவாய்ப் பல்லா… அது இல்லாம எப்படி நான் சாப்பிடுறது?”

“கண் தெரியாதவர், காது கேளாதவர், கை, கால் இல்லாதவர், எத்தனை பேர் இருக்கிறார்கள். உன்னால் ஒரே ஒரு பல் இல்லாமல் வாழ முடியாதா? சரி, உனக்குத் தேவையில்லாத ஏதேனும் அவயம் இருக்கிறதா என்று தேடிப் பார்…”

கால் விரல் தொடங்கி ஒவ்வொரு உறுப்பாக பார்வையை செலுத்தினாள் இளமதி. ஒவ்வோர் உறுப்பும் எத்தனை உபயோகமாக இருக்கிறது, எத்தனை அம்சமாக அமைந்திருக்கிறது என்று ஆசையாகப் பார்த்தாள். இத்தனை நாட்களும் சுண்டு விரலை மட்டுமே பார்த்து எரிச்சல்பட்டதால் எந்த அவயத்தையும் உருப்படியாக பார்த்ததே இல்லை என்பது புரிந்தது. ஏதோவொன்று இளமதியின் உள்ளத்தில் உடைந்து உடலெல்லாம் ஓடியது. கிழத்தைப் பார்த்தாள்.

“உனக்கு கிடைத்திருக்கும் பொக்கிஷத்தை ரசிக்கக் கற்றுக்கொள் மகளே. எது கிடைத்தாலும் அது அற்புதமே. யாருக்குமே கிடைக்காத ஆறாம் விரல் உனக்குக் கிடைத்திருக்கிறது என்று பெருமை கொள். ஒவ்வொரு நபரும் முதலில் அவர் உடம்பை நேசிக்க வேண்டும். அதுதான் ஆனந்தத்தின் ஆரம்பம். நீ தினமும் உன் உடல் உறுப்புகளுக்கு நான் சொல்லும்படி வந்தனம் செய். கொக்கு, பூனை, யானை என்று ஒவ்வொரு உயிரினமும் அதன் உடம்பை எப்படி கவனிக்கிறது என்று உற்றுக் கவனி. நீயும் உன் உறுப்புகளை நேசி… உறுப்புகளுடன் பேசு”

“எப்படி பேச வேண்டும்..?”

“என் அழகான கண்களை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். சகல ஒலிகளையும் கேட்கும் என் காதுகளைக் காதலிக்கிறேன். மணம் பிரித்தறியும் என் மூக்கை விரும்புகிறேன். உணவுகளை ரசிக்கவும், ருசிக்கவும், செமிக்கவும் உதவி செய்யும் பல், நாக்கு, உதடு மற்றும் ஜீரண உறுப்புகளை ரசிக்கிறேன். என் உடலுக்கு உறுதி கொடுக்கும் எலும்புகளையும் மினுமினுக்கும் தோலையும் விரும்புகிறேன். ரத்தம், காற்று சுத்திகரிக்கும் இதயம், நுரையீரல், கல்லீரல் உள்ளிட்ட அத்தனை உறுப்புகளையும் காதலிக்கிறேன். கழிவுகளை வெளியேற்றும் சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகளையும், இனப்பெருக்க உறுப்புகளையும் காதலிக்கிறேன். என் தலைமுடி, நகம், சிரிப்பு, எண்ணம் என எல்லாமே எனக்குப் பிடிக்கும். மொத்தத்தில் என்னை நான் காதலிக்கிறேன் என்று காலை எழுந்ததும் சொல். இரவு படுக்கும்போதும் சொல்.

நீ உன் உடலைக் காதலித்தால் உடலும் உன்னை காதலிக்கும். ஆரோக்கியமான உடல் கிடைக்கும். அதுதான் ஆனந்தத்தின் ஆரம்பம்…” தன் மனதில் இருந்த அத்தனை தடைகளும் உடைந்து புதிதாய் பிறந்ததாக உணர்ந்தாள். நன்றி சொல்ல வாய் திறக்கும் முன் மீண்டும் அவரே பேசினார்.

“இது நல்ல நேரம் இளமதி. இன்றே உன் உடலுக்கு உன் காதலைச் சொல்லிவிடு. அத்தனை அவயங்களுக்கும் உன் காதலை மனப்பூர்வமாக சொல்…” என்று உத்தரவிட்டதும் கண் மூடினாள். ஒவ்வொரு அவயத்தையும் மனக்கண் முன் கொண்டுவந்து தன்னுடைய காதலை மனப்பூர்வமாகத் தெரிவித்தாள். கூடுதலாக இருந்த சுண்டு விரலுக்கு முத்தம் கொடுத்தாள். இந்த உலகில் வெறுப்பதற்கு எதுவுமே இல்லை என்று இளமதிக்குத் தோன்றியது. ஆனந்தமாக கண் திறந்தாள்.

எதிரே கிழம் இல்லை. அவள் எதிர்பார்த்ததுதாம். முதன்முறையாக கோபுரத்தை நோக்கி கை குவித்துக் கும்பிட்டாள். ஆறாவது விரல் இளமதியின் மனதில் இருந்து மறைந்தேபோனது.

> கண் தெரியாதவர், காது கேளாதவர், கை, கால் இல்லாதவர், எத்தனை பேர் இருக்கிறார்கள். உன்னால் ஒரே ஒரு பல் இல்லாமல் வாழ முடியாதா? சரி, உனக்குத் தேவையில்லாத ஏதேனும் அவயம் இருக்கிறதா என்று தேடிப் பார்…



www.gyanaguru.com



# உயிர் காக்குமா மூச்சு பயிற்சி..?

மூச்சுப் பயிற்சியை தவம் போன்று செய்துவரும் பள்ளி ஆசிரியர் ஒருவர் ஞானகுருவை சந்தித்தார். ‘நான் சின்ன வயதில் இருந்து மூச்சுப் பயிற்சியை நாள் தவறாமல் செய்துவருகிறேன். ஆனால், அவ்வப்போது உடல் நலம் கெட்டு மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய அவசியம் நேர்கிறது. நான் தவறான வழியில் மூச்சுப் பயிற்சி செய்கிறேனா என்று சந்தேகம் கேட்டார். மூச்சை ஆழ்ந்து உள்ளே இழுத்து, அதனை வெளியிட்டபிறகு பேசத் தொடங்கினார் ஞானகுரு.

”வியாதி, நரை, மூப்பு, மரணம் இல்லாத அஸ்வினி சகோதர்கள்தான் பிரான, அபானன் என்ற வாயுக்களாக மூச்சுக் காற்றில் இயங்குவதாக வேதங்களில் சொல்லப் பட்டுள்ளது. இடகலை, பிங்கலை, சூயகலை, சந்திரகலை, சுசூம்னை என்றெல்லாம் சொல்லி விதவிதமாக மூச்சுப் பயிற்சி கற்றுத் தருகிறார்கள். மூச்சு எத்தனை தூரம் அடக்குகிறோமோ, அத்தனை தூரம் ஆயுள் கூடும் என்றும் சொல்வதுண்டு. நிதானமாக மூச்சுவிடும் ஆமை பல்லாண்டு வாழ்வதாக கணக்கு காட்டுகிறார்கள்.

ஆனால், இந்த மூச்சுப் பயிற்சினால் மட்டும் நோயில் இருந்து உடலைக் காப்பாற்ற முடியாது என்பதுதான் நிஜம். ஆம், நடை பயிற்சி, உடற்பயிற்சி போன்று மூச்சுப் பயிற்சியும் உடல் நலனுக்கான ஒரு பயிற்சி மட்டுமே.

நோயை வெல்வதற்கு உடலுக்கு நல்ல ஓய்வு கொடுக்க வேண்டும். நோய்க்கு ஏற்ற உணவு எடுத்துக்கொள்ள வேண்டும். நோய்க் கிருமிகளை நீக்கும் மருந்துகள் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, பயமும் பதட்டமும் இன்றி அமைதியான வாழ்க்கை முக்கியம்.

மூச்சுப் பயிற்சி என்றால் என்னவென்றே அறியாத ஒருவன் நீடுழி வாழ்வதும், தினமும் மூச்சுப்பயிற்சி செய்பவன் திடீரென மரணமும் அடையலாம். இதுதான் இயற்கையின் விசித்திரம்.

மூச்சுப் பயிற்சி செய் ஆனால் அது மட்டும் போதுமென இருந்துவிடாதே. அதுதான் மூச்சுப் பயிற்சியில் நீ கற்கவேண்டிய முதல் பாடம்.



www.gyanaguru.com

# கடவுள் ஏன் கைவிட்டார்?

தாங்கள் விரும்புவதை, ஆசைப்படுவதை செய்துதர வேண்டியது கடவுளின் கடமை என்பதுதான் மனிதனின் எண்ணம். அதற்காகவே பக்தி, பூஜை, வேண்டுதல் என்று என்னென்னவோ செய்கிறார்கள். கேட்பதை எல்லாம் கடவுள் கொடுத்துவிடுவாரா என்ன...?

கோயில் தூணில் சாய்ந்து அமர்ந்திருந்த ஞானகுருவிடம் வந்து நின்றாள் பெண் ஒருத்தி. கையில் கொஞ்சம் பிரசாதம், வாழைப்பழமும், கண்களில் கேள்வியும் இருந்தது பிரசாதத்தை கையில் கொடுத்துவிட்டு கேள்வியைக் கேட்டாள்.

‘‘18 வாரமா வெள்ளிக்கிழமை விரதம் இருந்து 18 பேருக்கு பிரசாதம் கொடுக்கிறேன். என் பொண்ணுக்கு நல்ல வரன் அமையணும்னு சாமிகிட்டே வேண்டியிருக்கேன். இன்னும் ரெண்டு வாரத்துல விரதம் முடியப்போகுது, ஆனா, இன்னமும் வரன் வரலையே சாமி... அதுக்குரிய அறிகுறியும் தெரியலையே”

‘‘இன்னும் ரெண்டு வாரம் இருக்கே..”

‘‘அப்படின்னா, ரெண்டு வாரத்துல நிச்சயம் கிடைச்சுடுமா..?”

‘‘ஐப்பசியில் மழை வரும்... வரவேண்டும். வரலாம், வராமலும் போகலாம். உனக்கு சந்தேகம் இருந்தால் விரதத்தை நிறுத்திவிடு, சாமியா உன்கிட்டே விரதம் இருக்கச் சொல்லிச்சு?”

‘‘என்ன சாமி கோபப்படுறீங்க, 16 வாரமாச்சு, இன்னும் நல்ல செய்தி எதுவும் வரலை, அதான் நல்லதா சொல்வீங்கன்னு கேட்டேன்.. பாதியில நிறுத்துனா தெய்வகுத்தம் ஆயிடுமே...”

‘‘மேட்ரிமோனியல்ல பதிவு செஞ்சு தேடுறியா?”

‘‘அது நடக்குது சாமி, அங்கே எதுவும் அமையாமத்தான் இங்கே வந்திருக்கேன்..”

‘‘கடவுள் புரோக்கரா வந்து, உன் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்து தரணுமா... கடவுள்கிட்டே கேட்கிறதுக்கு வேற எதுவும் உன்கிட்டே இல்லையா..?”

‘‘நமக்கு என்ன வேணுமோ, அதைத்தானே கடவுள்கிட்டே கேட்க முடியும்...”

‘‘அதுசரி, முன்கூட்டியே சம்பளத்தைக் கொடுத்துட்டு வேலை செய்யச் சொல்றே. ஆனா, கேட்கிறவங்களைவிட, எதுவும் கேட்காதவங்களுக்குத்தான் கடவுள் சீக்கிரமா காரியங்களை முடித்துக் கொடுப்பார்...”

‘‘அப்படின்னா..”

‘‘பொறுமை இல்லாதவர்களும் நாத்திகர்களே...” திரும்பிப் படுத்தார் ஞானகுரு.



www.gyanaguru.com



# மதம் மாறினால்...

அண்டை வீட்டுக்காரன் நல்லவராக அமைவதும் ஒரு யோகம் என்பார்கள். எப்படிப்பட்ட நபர் அண்டை வீட்டுக்கு வந்தாலும், அவர்களுடன் இணைந்து ஒற்றுமையாக வாழ முடியும் என்ற நம்பிக்கை இல்லாதவர்கள்தான் யோகத்துக்கு ஆசைப்படுகிறார்கள். அண்டை வீட்டுக்காரரரை வெல்வதற்காக பலர் பாதை மாறுகிறார்கள், பலர் தங்கள் வாழ்க்கையை தொலைத்துவிடுகிறார்கள்.

விட்டேத்தியாக மரத்தடியில் படுத்துக்கிடந்த ஞானகுருவின் அருகே ஒரு மனிதன் அமர்ந்து நிதானமாக பேச்சு கொடுத்தான்.

“சாமி, 50 வயசாச்சு. நான் குல தெய்வத்தில் இருந்து எல்லா சாமிகளையும் தவறாம கும்புடுறவன்தான். ஆனா, இன்னமும் மாசக் கடைசியிலே கடன் வாங்குற நாறப் பொழப்புத்தான் வாழுறேன். எங்க வீட்டுக்குப் பக்கத்துல புதுசா வந்திருக்கிற ஒருத்தர், அவரோட மதத்துக்கு மாறிட்டா, நிச்சயம் நல்லது நடக்கும்னு சொல்றாரு... செல்வம் வரும்னு சொல்றார். எனக்கும் மனசு தடுமாறுது சாமி” என்று கேட்டார்.

அவனை ஆழமாக பார்த்தார் ஞானகுரு.

“நீ இதுவரை உன் பெற்றோர் எந்த மதமோ, அந்த மதத்தை சேர்ந்தவனாக வளர்ந்திருக்கிறாய். புதிய மதத்தில் சேர நினைப்பது நல்ல விஷயம். ஆனால், எதற்காக மாறுகிறாய் என்பதுதான் பல கேள்விகளை எழுப்புகிறது.

யாரெல்லாம் மதம் மாறுகிறார்கள் என்று பார்த்திருக்கிறாயா..? பணத்துக்கு சிரமப்படுபவர்கள், ஆரோக்கியம் இழந்தவர்கள், ஜாதியினால் அவமானம் அடைபவர்கள் மட்டும்தான் இதுவரை மதம் மாறுகிறார்கள். எந்த பணக்காரனும், உயர் ஜாதியினரும் ஏன் மதம் மாறுவதில்லை என்று யோசித்திருக்கிறாயா..?

நீ மாறப்போகும் மதத்தில் ஏழைகள் என்று யாருமே இல்லையா..? அந்த மதத்தில் எல்லோரும் ஆரோக்கியமாக இருக்கிறார்களா..? அந்த கடவுள் எல்லோரையும் சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் வைத்திருக்கிறார் என்பதை உறுதியாக நம்புகிறாயா..? நீ மதம் மாறுவதால் உன்னுடைய அத்தனை நிலைமையும் மாறிவிடும் என்று உறுதியாக நம்புகிறாயா?

உன்னை மீட்க வந்த மீட்பரா பக்கத்து வீட்டுக்காரர். அவர் வரவில்லை என்றால் நீ மதம் மாறுவதை பற்றி சிந்திப்பாயா..? இந்த கேள்விகளுக்கு எல்லாம் விடை அறிந்துவந்து சொல். எனக்கும் உடன்பாடாக இருந்தால் நானும் மதம் மாறுகிறேன் என்றார் ஞானகுரு.

அன்று போனவன் இன்று வரை திரும்பவில்லை.

www.gyanaguru.com

www.gyanaguru.com











# தூக்கம் எனும் மருத்துவர்

**மந்திரச்சொல்**

ஒவ்வொரு
சூரிய உதயத்திலும்
நம்பிக்கையை பெறு,
ஒவ்வொரு சூரிய
அஸ்தமனத்திலும்
அமைதியை பெறு.

மனித உடலின் சக்தி மகத்தானது. உடலின் சக்தியை இதுவரை எந்த மருத்துவராலும் முழுமையாக அறிந்துகொள்ள முடிந்ததில்லை, அறிந்துகொள்ளவும் முடியாது. ஏனென்றால், உடல் என்பது எண்ணங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. எண்ணம் சரியாக இருந்தால், உடல் நலம், தானே நிகழ்ந்து விடும்.

கை நிறைய மருந்து, மாத்திரைகளுடன் குடும்பத்தலைவன் ஒருவன் ஞானகுருவின் எதிரே தென்பட்டான். அவனை தடுத்துநிறுத்தினார் ஞானகுரு.

“சரியான நேரங்களில் நீ தூங்குவதில்லையா..?”

‘’ஏன் கேட்கிறீர்கள்..? அதெப்படி உங்களுக்குத் தெரியும்?” தடுமாறினான்.

‘’நீ போதுமான அளவு தூங்குபவனாக இருந்தால், இத்தனை மருந்தும், மாத்திரைகளும் தேவைப்படாது. உன் உடலைவிட சிறந்த மருத்துவன் இந்த உலகில் எவனுமில்லை. நீ விழித்திருக்கும் நேரத்தில் கவலை, கோபம், ஆசை, அழுத்தம், பயம், முறையற்ற உணவு ஆகியவற்றால் இதயம், நுரையீரல், வயிறு, சிறுநீரகம் போன்றவற்றைக் கெடுத்துக் கொள்கிறாய். இரவு நீ அமைதியாக உறங்கியதும், உன் எண்ணங்கள் உன் உடலை குணப்படுத்தும் பணியை செய்கின்றன. இதயத்தை, நுரையீரலை, சிறுநீரகத்தை அமைதிப்படுத்துகிறது. மூச்சு விடுவதை சீராக மாற்றுகிறது. இன்னும் சொல்லப்போனால் விழித்திருக்கும்போது, நீ கெடுத்து வைத்திருக்கும் உடலை, இரவு நேரத்தில் மனம் குணப்படுத்துகிறது…”

”அப்படியென்றால் தூங்கினால் மட்டும் போதுமா..?”

“அதனால்தான் எந்த நோய்க்கு போனாலும், நிம்மதியாக தூங்குவதற்கு ஒரு மருந்து தருகிறான் மருத்துவன். நீ பகலில் குறைவாக தவறு செய்தால், இரவில் உடல் எளிதில் தன்னைத்தானே சரி செய்துவிடும். ஆனால், நீ பகல் முழுவதும் தவறுகள் செய்துகொண்டே இருந்தால், உன்னைக் குணப்படுத்த ஓர் இரவு போதாது. நோய்க்கும், குணப்படுத்தலுக்குமான இடைவெளி அதிகரிக்கும்போது, எண்ணங்களே உன் உடல் மீது நம்பிக்கை இழந்து உன்னை கைவிட்டு விடும்…”

உடல்நிலை சரியில்லாத காலத்தில் நாம் அதிகமாக உறங்கி வழிவதன் காரணம் தெரியுமா? உடம்பை சரிசெய்வதற்கு உடல் கூடுதல் நேரம் எடுத்துக்கொள்வதுதான். எனவே,உடலுக்குத் தேவையான நேரத்தைக் கொடுக்கத்தான் வேண்டும். உடல் சரியில்லாத நேரத்தில் தூக்கமே மருந்தாக செயல்படும்.

தூங்குவதன் மூலம் கவலை, பயம், டென்ஷன் போன்றவையும் உன்னைவிட்டு நகரும். பொய்யான பிரச்னைகளில் இருந்து உன்னை காப்பாற்றுவதும் தூக்கம்தான்…”

“படுக்கையில் படுத்தாலும் தூக்கம் வரவில்லையே..?”

“தூக்கத்தை வேண்டா விருந்தாளியாக நினைக்காதே. உன்னுடைய கனவு தேவதையாக நினைத்து காத்திரு. வரும்போது வரட்டும். அதுவரை அவள் நினைவுடன் காத்திரு… நள்ளிரவுத் தூக்கம் மிகமிக அவசியம்”

‘’ஆனால், நைட் ஷிப்ட் போகவேண்டிய கட்டாயம் இருக்கிறதே..”

“உன் உடல் கடிகாரத்தை முறைப்படி பழக்கவேண்டியது உன் பொறுப்பு. தொடர்ந்து நைட் ஷிப்ட் எடுத்துக்கொண்டு, பகலை இரவாக்கு. ஒரு வாரம் பகல் அடுத்த வாரம் இருள் என்று பணியாற்றுபவன் நிரந்தர நோயாளிதான்” என்றபடி நகர்ந்தார் ஞானகுரு.



www.gyanaguru.com



# கொலையும் செய்யுமா காதல்..?

ஜோசப்பை அழைத்துக்கொண்டு வந்தார் அவனது தந்தை. 25 வயதுக்கே உரிய தெனாவெட்டு, அசட்டை, திமிர் எல்லாமே ஜோசப் கண்களில் அப்பட்டமாகத் தெரிந்தது.

''இந்த வாரம்தான் ஜெயில்ல இருந்து ஜாமீன்ல வந்திருக்கான். இன்னமும் அந்த பொண்ணு மேல கோபமும் ஆத்திரமும் அடங்காம இருக்கான். யார் சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறான்'' என்று மகன் மீது புகார் பத்திரம் வாசித்தார் தந்தை. வேறு யாரோ ஒருவரை பற்றி தந்தை பேசுவது போன்று கண்டுகொள்ளாமல் நின்றான் ஜோசப்.

என்ன நடந்தது?

இரண்டு வருடம் முன்பு இன்ஜினியரிங் முடித்த ஜோசப், ஒரு பெரிய நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்தான். அவன் முன்பு குடியிருந்த தெருவில் நித்யாவின் வீடு இருக்கிறது. அவளது அமைதியான குணமும் இயல்பான பேச்சும் ஜோசப்பிற்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. இருவரும் அவ்வப்போது பார்த்திருக்கிறார்கள். நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைத்த சமயத்திலும் இயல்பாகவே பேசியிருக்கிறாள் நித்யா.

ஒரு கட்டத்தில் ஜோசப்பே தைரியமாக முன்வந்து, 'மனதார காதலிக்கிறேன்... திருமணம் முடிக்கத் தயாராக இருக்கிறேன்' என்று கூறியிருக்கிறான். ஆனால், அவனது காதலை ஏற்க நித்யா முன்வரவில்லை. மீண்டும் மீண்டும் நித்யாவிடம் தன்னுடைய காதலை சொல்லிக்கொண்டே இருந்திருக்கிறான் ஜோசப். அதற்கு நித்யாவும் தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வந்திருக்கிறாள். இதனால் கடுப்பான ஜோசப், நேரடியாக அவளுடைய வீட்டுக்கே போய் தன்னுடைய காதலை பெரியவர்கள் முன்பு சொல்லிவிட முடிவு செய்திருக்கிறான்.

அதோடு நில்லாமல், 'நித்யா மீண்டும் மறுத்தால் அவள் கண் முன்னே கழுத்தை அறுத்து தற்கொலை செய்துவிடலாம்' என்ற முடிவுடன் வீட்டிலிருந்து காய் நறுக்கும் கத்தியை எடுத்து பாக்கெட்டில் வைத்து கொண்டு போயிருக்கிறான்.

இவன் போன நேரத்தில் முன்னறையில் நித்யா டி.வி. பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறாள். இவனைத் திடீரென பார்த்ததும் பயந்து அலற, அவளது அப்பா, அம்மா, பாட்டி என எல்லோரும் பதறி வந்திருக்கிறார்கள். உடனே மிரண்ட ஜோசப் கத்தியை எடுக்க, நித்யா மேலும் பலமாக கத்தியிருக்கிறாள். ஜோசப்பைப் பிடிக்க அவளது அப்பா நெருங்கிய சமயத்தில், 'அவனை பிடிச்சு வெளியே தள்ளுங்கப்பா' என்று நித்யா கத்தியது ஜோசப்பிற்கு அதிகப்படியான கோபத்தை உண்டாக்கியிருக்கிறது.

உடனே அவள் வாயை பொத்த கத்தியுடன் பாய்ந்திருக்கிறான். அந்த நேரத்தில் கையில் இருந்த கத்தி நித்யாவின் மீது பாய்ந்திருக்கிறது. காய் நறுக்கும் கத்தி என்பதால் முழுவதும் வயிற்றுக்குள் இறங்காமல் மேலோட்டமாக வயிற்றைக் கீறியிருக்கிறது. கொப்பளித்த ரத்தத்தைப் பார்த்து எல்லோரும் அலற, அக்கம்பக்கத்தினர் அவனை அமுக்கிப்பிடித்து போலீஸில் ஒப்படைத்திருக்கிறார்கள். இப்போது சிறையிலிருந்து ஜாமீனில் வெளியே வந்திருக்கிறான். யாரிடமும் பேசும் மனநிலையில் இல்லை அவன் இல்லை என்பது புரிந்தது.


www.gyanaguru.com

”சரி, ஜோசப் மட்டும் இங்கு இருக்கட்டும் நீங்கள் வெளியே அமருங்கள்..” என்றதும் கிளம்பிய தந்தையுடன் ஜோசப்பும் எழ முற்பட்டான்.

பளாரென ஜோசப் கன்னத்தில் அடித்தார் அவனது தந்தை. ‘‘உனக்காகத்தான் இங்கே வந்திருக்கோம், நீயும் எந்திரிச்சா என்ன அர்த்தம்..?” என்று ஆவேசமானார்.

’’பெத்தவங்ககிட்ட இருந்துதான் புள்ளைக்கு அவசரப்புத்தி, ஆத்திரம் வருது... நீங்க போகலாம்” என்று தந்தையிடம் கண்டிப்பாகப் பேசி வெளியே அனுப்பினேன். சிறிது நேரம் அவனுடன் பேசாமல் ஒரு புத்தகத்தை விரித்துவைத்துப் படித்தேன்.

வெறுமையைத் தாங்கமுடியாமல் ஜோசப் தவிப்பது தெரிந்தது. அவன் பேசத் தயாராகிவிட்டது அறிந்ததும் கேள்வியை வீசினேன்.

”அடுத்து என்ன செய்யப்போற..?”

’’நல்லா படிச்சிருக்கேன். நல்லா சம்பாதிக்கிறேன். சொந்த வீடு இருக்கு. இதைவிட நித்யாவுக்கு என்ன வேணும்..? எதுக்காக என்னை வேண்டாம்னு சொல்றா... திரும்பவும் அவகிட்டே கேட்கத் தான் போறேன். பேசப் போனதுக்கே, கொலை செய்யப் போனதா சொல்லிட்டா. உண்மையிலே கொலை செஞ்சிட்டு ஜெயிலுக்குப் போனாலும் தப்பில்லே..” என்று ஆத்திரம் தீராமல் பேசினான்.

”சரி, உனக்கு தங்கை இருக்குதா..?”

“இல்லை... ஏன்?”

‘‘உனக்கு ஒரு தங்கை இருந்தா, அவனுக்கு உன்னைப் போல ஒருத்தனை கல்யாணம் செஞ்சு கொடுப்பியா..?”

“நிச்சயமா செஞ்சு கொடுப்பேன். என்கிட்டே எந்த கெட்ட பழக்கமும் கிடையாது. சிகரெட், தண்ணியெல்லாம் தொட்டுக்கூட பார்க்கிறதில்லை...”

‘‘அதாவது, உன் தங்கச்சி கல்யாணத்தையும் நீதான் தீர்மானம் செய்வ, அவளுக்கு ஏத்த கணவனை அவ தேர்வு செய்யக்கூடாது... அப்படித்தானே?”

“இதுல என்ன தப்பு இருக்குது..? நல்லதைத்தானே தேர்வு செஞ்சு கொடுக்கிறோம்..””

“நீ ஏன் நித்யாவுக்கு ஆசைப்படுறே”

“எனக்கு பிடிச்சிருக்கு... மனசுல எப்பவும் அவதான் இருக்கிறா...”

“நீ மட்டும் மனசுக்குப் பிடிச்சதுக்கு ஆசைப்படலாம். ஆனா, நித்யா, உனக்கு இல்லாத தங்கச்சி எல்லாம் மனசுக்குப் பிடிச்சதுக்கு ஆசைப்படக்கூடாதா... நித்யா மனசுல வேறு யாராச்சும் இருக்கலாமே, இல்லை இப்போ கல்யாணம் வேண்டாம்னு நினைக்கலாம்...”

அமைதியாக இருந்தான். ‘‘என்னை வேண்டாம்னு சொல்ல ஒரு காரணமாவது சொல்லலாமே...”

“சிலருக்கு ரோஜாப்பூ பிடிக்கும், சிலருக்கு பிடிக்காது. இதுக்கெல்லாம் கண்டிப்பா காரணம் சொல்லத்தான் செய்யணுமா... பிடிக்கலைன்னா, ;அது பிடிக்கலைன்னு எடுத்துக்கலாமே...”

‘‘நான் நிஜமாகவே நல்ல பையன் சார். என்னை கட்டிக்கிட்டா அவளை ராணி மாதிரி வைச்சிருப்பேன்..”

‘‘பெண்கள் யாரும் ராணி மாதிரி வாழ ஆசைப்படுறதில்லே, சுதந்திரமான ஒரு மனுஷியா வாழத்தான் விரும்புறாங்க... நீ நல்ல மனுஷனா இருக்கலாம். ஆனா, நல்ல காதலன் இல்லை...”

‘‘ஏன் அப்படி சொல்றீங்க..?”

‘‘காதல்ன்னா என்னன்னு சொல்லு... கேட்கலாம்...”


‘‘மனசுக்குப் பிடிச்சவங்களோட வாழ்ந்து, அவங்களை நல்லா கவனிச்சிக்கிறது...”

‘‘உன் மனசுக்கு மட்டும் பிடிச்சிருந்தா போதுமா... அவங்க மனசுக்கும் பிடிக்க வேண்டாமா..?”

அமைதியாக இருந்தான் ஜோசப்.

’’அது சரி, நித்யாவை திருமணம் பண்ணிக்க ஆசைப்படுற... அவங்களுக்குப் பிடிக்கலைன்னா விட்ரலாமே..?”

“பெண்கள் யாரும் ராணி மாதிரி வாழ ஆசைப்படுறதில்லே, சுதந்திரமான ஒரு மனுஷியா வாழத்தான் விரும்புறாங்க... நீ நல்ல மனுஷனா இருக்கலாம். ஆனா, நல்ல காதலன் இல்லை...”







’’ஆரம்பத்தில் இருந்தே என்கூட பேசாம இருந்திருக்கலாமே..?”

“சாதாரணமா ஒரு பொண்ணும் பையனும் பேசுறது தப்பா... அது தப்புன்னே வைச்சுக்குவோம். அவளை மன்னிச்சிடலாமே..?”

“என் நிலைமையில இருந்து பார்த்தா மட்டும்தான் நான் படுற வேதனை, அவஸ்தை தெரியும், மன்னிக்கச் சொல்லி அட்வைஸ் பண்றது ரொம்பவும் ஈஸி. என் நிலைமையில வேற எவனாவது இருந்தா இந்நேரம் அவ குடும்பத்தையே கொளுத்தியிருப்பான்...”

’’நல்லா இருக்கே உன் நியாயம். உன்னை அவ காதலிக்கலைங்கிறதுக்காக ஒரு குடும்பத்தையே கொலை பண்ணுவியா..? சரி, கெட்டது செஞ்சவங்களுக்கும் நல்லது செய்யுங்கன்னு உங்க மதம் சொல்லுது. அப்படி எல்லோரையும் மன்னிச்ச ஒருத்தரை உனக்கும் தெரியுமே...”

“அப்படியெல்லாம் யாரும் இருக்க மாட்டாங்க, எனக்கும் தெரியாது..”

”சரி... அப்படி ஒருத்தர் மீது நம்பிக்கை இல்லைன்னா அவரைப் பத்திச் சொல்றதுல அர்த்தம் இல்லை...’’ அமைதியானேன்.

’’அப்படிப்பட்ட ஆள் யாரையுமே தெரியாதுன்னு சொல்றேன், நீங்க என்னடான்னா...” என்று இழுத்தான். கொஞ்சநேர அமைதிக்குப் பின் பேசினேன்.

”ஊர் மக்கள் முன்னே அவமானப்படுத்தி, அடித்து, சித்ரவதை செய்து, ரத்தம் சிந்தசிந்த ஆணியடித்து சிலுவையில் ஏற்றியவர்களை இயேசு ஏன் மன்னித்தாருன்னு சொல் ஜோசப்.. தான் என்ன செய்கிறோம் என்று அறியாமல் செய்தவர்களை மன்னியுங்கள் பிதாவே என்றுதானே கேட்டுக்கொண்டார்...”

ஒரு கணம் திகைப்படைந்தவன், ‘‘அவர் ஆண்டவர், நான் சாதாரண மனுசன்தான...” என்றான் தடுமாற்றத்துடன்.

”அவர் எதிரிகளையே மன்னிச்சார், உன்னால, உனக்குப் பிடிச்ச காதலியை மன்னிக்க முடியாதா... நீ ஆண்டவரா இருக்க வேண்டாம், மனுசனா இருக்கலாமே!”

”ஆனா நித்யா செஞ்சது தப்புதானே...”

”அவரவர் நியாயம் அவரவருக்கு. அவளுக்கு என்ன நிர்ப்பந்தமோ... அல்லது உண்மையாகவே உன் மீது விருப்பம் எழவில்லைவில்லையோ என்னவோ..?”

’’இல்லை, அவ கண்ணுல காதலைப் பார்த்தேன்...”

’’இருக்கலாம் ஜோசப்... அவளுடைய வாழ்க்கையைப் பத்தி முடிவெடுக்க அவளுக்கு முழு உரிமை இருக்கு, அதுல தலையிட நீ யாரு...?”

கொஞ்சநேரம் யோசித்தான்.

”போதும் ஜோசப், புது மனுசனா மாறு. நித்யாவை மட்டுமில்ல, இந்த உலகத்துல இருக்கிற எல்லா மனிதர்களையும் காதலிக்கத் தொடங்கு... மனதில் இருக்கும் ஆசையை, கோபத்தை வெளியே அனுப்பு. உனக்காக காத்திருக்கும் உன் பெற்றோருக்கு நல்ல மகனாக முதலில் நடந்துகொள்...”

“நித்யாவை நான் திருமணம் முடிக்க வழியே இல்லையா?”

”எதிர்காலம் எப்படிப்பட்ட ஆச்சர்யங்களை ஒளித்து வைத்திருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது ஜோசப். நம்பிக்கையுடன் எதிர்காலத்தை சந்திக்கத் தொடங்கு. நீ விரும்பியதை எல்லாம் அடையவேண்டும் என்று நினைக்காதே. உனக்கு என்ன கொடுக்கவேண்டும் என்பது இந்த பிரபஞ்சத்துக்குத் தெரியும். நீ எதற்கு தகுதியானவனோ, அது கொடுக்கப்படும். உன்னுடைய தோல்வியில்தான் உன் காதல் ஜெயிக்கிறது என்றால், அது அப்படியே இருக்கட்டும். மீண்டும் உனக்குள் ஒரு காதல் பூ மலரலாம்... அது, எப்போது யார் மீது என்பது எதிர்காலத்திற்குத்தான் தெரியும்” என்று முடித்தேன்.

இன்னும் சில சந்தேகங்களைக் கேட்டான். சொன்ன பதிலை விவாதம் செய்தான். பின்னே சட்டென்று சந்தோஷமாக எழுந்தான்.

‘‘இன்னமும் எனக்கு முழு தெளிவில்லை, ஆனால் நித்யா மீது கோபம் கொள்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்பது தெரிந்துவிட்டது. மீண்டும் வருகிறேன்...” என்றபடி வெளியேறினான். அங்கு தவிப்புடன் அமர்ந்திர்ந்த தந்தையின் கைபிடித்து ஆதரவாக நடக்கத் தொடங்கினான்.

பி.கு: சம்பந்தப்பட்ட நபர்களின் பெயர்கள் முழுமையாக மாற்றப்பட்டுள்ளன.

## மந்திரச்சொல்

வெற்றிக்கு ஆசைப்பட்டால் நீ தனியே நின்றுதான் போராட வேண்டும். கடவுளும் வேடிக்கைதான் பார்ப்பார்.



**? மறுஜென்மம் உண்டா?**

**-எஸ்.விவேக், காமராஜர்புரம்**

**ஞானகுரு :**

விதையின் மரணம் மரமாகிறது. மேகத்தின் மரணம் மழையாகிறது. காலகாலமாக நடக்கும் இந்த சுழற்சியினால் பிரபஞ்சத்தில் உருவான எதுவும் முற்றிலும் அழிவதில்லை. ஓர் அழிவு மற்றொன்றின் தொடக்கம் என்பதால் ஸ்தூல உடலுக்கும் சூட்சும உடலுக்கும் அழிவே கிடையாது. அடுத்த ஜென்மம் இருந்தாலும் அதனை உன்னால் அறியமுடியாது. அறிவதற்கு அவசியமும் இல்லை. அதனால் இந்த ஜென்மத்தை நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு முயற்சி செய், மறுஜென்மத்தை இறைவன் பார்த்துக்கொள்வார்.


# ஞானகுரு பதில்கள்

**? வாழ்க்கைப் போராட்டத்தைப் பார்க்கும்போது மனிதனாய் பிறந்ததைவிட விலங்காகப் பிறந்திருக்கலாமோ..?**

**- வி.கற்பகம், திருச்சுழி.**

**ஞானகுரு :**

இக்கரைக்கு அக்கரைப் பச்சை. தன் இலையில் விழுந்ததைவிட பக்கத்து இலை நண்பனுக்கு பெரிய லட்டு விழுந்திருக்கிறது என்று ஆதங்கப்படும் மனிதர்கள்தான் இங்கே அதிகம். கிடைத்ததை அனுபவிக்காமல் பறப்பதற்கு ஆசைப்படாதே. ஒரு தெருநாயை தடவிக்கொடுத்து வாழ்க்கையைக் கேட்டுப்பார், ஒரு வாய் உணவுக்காக நிற்க நேரமில்லாமல் ஓடிக்கொண்டே இருக்கும் சோகத்தை கொட்டித்தீர்க்கும்.



**? சேவை என்பது என்ன?**

**- என்.நிவேதா, விழுப்புரம்.**

**ஞானகுரு :**

கோயிலுக்கு டியூப்லைட் வாங்கிப்போட்டு, வெளிச்சம் தெரியாதபடி குண்டு எழுத்தில் பெயரை எழுதிவைப்பது அல்ல, தேவை அறிந்து உதவுவது சேவை. நன்கொடை கொடுத்தால் எவ்வளவு விளம்பரம் கிடைக்கும், வரிவிலக்கு இருக்கிறதா என்றெல்லாம் யோசிக்காமல், யாருக்கேனும் உதவி தேவை என்று தெரியவந்தால், அடுத்த கணமே உதவு. உன் செலவுக்குப் போக மீதமிருந்தால் செய்வது அல்ல, உன் தேவைகளைக் குறைத்துக்கொண்டு செய்வது சேவை. சேவை செய்வதற்கு பணம் தேவையில்லை, மனம்தான் வேண்டும்.







**? ஆசைப்படுவது நல்லதா, கெட்டதா? ஒவ்வொருவரும் ஒரு மாதிரி சொன்னால் என்னதான் செய்வது?**

**- வி.சந்திரமோகன், ஆர்.ஆர்.நகர்**

**ஞானகுரு :**

வியாதி இல்லாத உடலுக்கு நோயாளி ஆசைப்படுகிறான். பணம் வேண்டும் என்று பிச்சைக்காரன் விரும்புகிறான். வெற்றி வேண்டுமென்று தோல்வியாளன் ஆசைப்படுகிறான். அதாவது தன்னிடம் இல்லாத ஒன்றுக்குத்தான் மனிதன் ஆசைப்படுகிறான். உன்னிடம் எது இருக்கிறதோ அதற்காக ஆசைப்படு. உன்னிடம் ஒரு சைக்கிள் இருக்கிறதா, ‘நல்லவேளையாக நான் ஒரு சைக்கிள் வைத்திருக்கிறேன், எத்தனையோ பேர் சைக்கிள் வாங்கமுடியாமல் இருக்கிறார்கள்’ என்று சந்தோஷம் கொள். இப்படி உன்னிடம் இருக்கும் ஒவ்வொன்றையும் கொண்டாடினால், இல்லாததும் வந்துசேரும். ஆம், அதன்பிறகு ஆசையின் மீதும் நீ ஆசை வைக்கும் தகுதி வந்துசேரும்.

www.gyanaguru.com



**? பந்தம், பாசம் எல்லாம் வேஷம்தானே..?**

**- என்.வடிவேல், வள்ளியூர், ஆமத்தூர்.**

**ஞானகுரு :**

முதலீடு செய்த அன்புக்கு பலன் எதிர்பார்க்கும் வங்கிக் கடை அல்ல வாழ்க்கை. எது எதிர்பார்த்தாலும் ஏமாற்றம் கிட்டத்தான் செய்யும். அதனால் அன்பு செய்வதாக மட்டுமே பணி இருக்கட்டும். கொடுப்பதில் கிடைக்கும் இன்பம் வாங்குவதில் கிடையாது என்ற உண்மையைப் புரிந்துகொள்.



**? புத்தகத்தைத் தொட்டாலே தூக்கம் வருகிறதே.. நான் என்ன செய்வது?**

**- எஸ்.விக்ரம் சூலக்கரை.**

**ஞானகுரு :**

சினிமா தொடங்கியதும் தூங்கிவிடுகிறாயா…? விளையாடத் தொடங்கியதும் தூக்கம் வருகிறதா..? அங்கெல்லாம் வராத தூக்கம் புத்தகத்தில் மட்டும் ஒளிந்திருக்கிறது என்று நினைக்கிறாயா..? உனக்கு படிப்பதற்கு ஆர்வம் இல்லை என்பதுதான் உண்மை. ஆர்வம் தானாகத் தோன்றும் வரை புத்தகத்தைத் தொடாதே…



**? விவசாயம் அழிவதற்கு என்ன காரணம்?**

**- ஜி.பிரசன்னா, சிவகாசி.**

**ஞானகுரு :**

விவசாயிகள்தான் அழிகிறார்கள், விவசாயம் அல்ல. எந்தக் காலத்தையும்விட இப்போதுதான் அதிகபட்ச அறுவடை நடக்கிறது. உழைக்கும் மனிதர்கள் கையில் இருந்த விவசாயத்தை கார்ப்பரேட் மனிதர்கள் பறித்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

**? எப்போதுமே சந்தோஷமாகவே இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்..?**

**- ஏ.சௌந்தர்யா ஆனந்த்**

**ஞானகுரு :**

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் சிரித்துக்கொண்டே இருப்பார்கள் அல்லது யாரையேனும் திட்டிக்கொண்டே இருப்பார்கள். நீயும் அப்படித்தான் ஒரே மாதிரி வாழ ஆசைப்படுகிறாயா? தினமும் இனிப்பு சாப்பிட்டால், அதுவும் ஒரு கட்டத்தில் உனக்கு பிடிக்காமல் போய்விடும். ஆகவே, துன்பத்திற்கும் ஆசைப்படு.



**? பள்ளிகள் வியாபாரக்கூடமாக மாறிவருகிறதே..?**

**- டி.முனியம்மாள், கூமாபட்டி**

**ஞானகுரு :**

நிறைய பணம் கட்டி படிக்கவைத்தால் எதிர்காலத்தில் நிறையநிறைய சம்பாதிப்பான் என்று கணக்குப்போட்டு படிக்கவைப்பது நீதானே. வியாபார புத்தியுடன் நீ யோசிக்கும்போது, பள்ளிக்கூடம் நடத்துபவனும் வியாபாரம்தானே செய்வான். மாணவர்களை சிந்திக்கத் தூண்டும் குருவும் கல்வி சாலையும் இன்னமும் திறந்துதான் கிடக்கின்றன. தேடிக் கண்டுபிடிப்பதுதான் பெற்றோரின் கடமை.



www.gyanaguru.com

# ஞானகுரு பதில்கள்

**? நிம்மதியாக வாழ ஆசைப்படுகிறேன். எங்கே கிடைக்கும் நிம்மதி?**

**- மணி ஸ்ரீதர், விழுப்புரம்**

**ஞானகுரு :**

தேடினால் கிடைக்காது. மனிதனாகப் பிறந்த யாரும் நிம்மதியாக அக்கடாவென்று வாழவும் முடியாது. பணம், அதிகாரம், செல்வாக்கு போன்றவற்றாலும் நிம்மதியை வாங்க முடியாது. இந்த உலகில் கல்லும் மண்ணும் தான் நிம்மதியாக இருக்கின்றன. நீயும் அப்படி மாறினால் நிம்மதி கிடைக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட நிம்மதி தேவைதானா..? பரபரப்பும் துடிதுடிப்புமாக வாழப்பழகு. உழைத்துக் களைத்த ஓய்வில் கொஞ்சநேரம் நிம்மதியைத் தொட்டுப் பார்க்கலாம்.




**? ஐயா, எனக்கு திருமணமாகி ஏழு வருடங்களாகி விட்டன. ஒரு குழந்தை இருக்கிறது. தினம்தினம் மனைவியுடன் சண்டை நடக்கிறது. வீட்டுக்குப் போகவே வெறுப்பாக இருக்கிறது. நான் அவளை விவா கரத்து செய்துவிட்டு இன்னொரு திருமணம் செய்வதா அல்லது சாமியாராகி விடலாமா?**

**- சி.பரந்தாமன்**

**ஞானகுரு :**

ஆணின் ரத்தத்தில் பெண்ணை அடிமையாக்கும் வெறி இருக்கிறது. பெண்ணின் ரத்தத்தில் அன்பின் மூலம் ஆணை வளைத்துப்போடும் தந்திரம் உண்டு. இருவரில் ஒருவர் ஜெயித்துவிட்டால் அந்த வீடு அமைதியாகிவிடும். ஆனால் நீ தோற்கவும் செய்யாமல் ஜெயிக்கவும் செய்யாமல் ஏழு வருடங்களாக போராடிக்கொண்டே இருக்கிறாய். வெற்றிகொள் அல்லது தோற்றுப் போ. ஒரு பெண்ணை சமாளிக்க முடியாத உன்னால் எப்படி வயிற்றை ஜெயிக்க முடியும்?



**? என் ஒரே மகனின் ஜாதகம் அனுப்பி இருக்கிறேன். அவனுக்கு கிரிக்கெட், டென்னிஸ் இரண்டிலும் ஆர்வம் இருக்கிறது. எந்த விளையாட்டில் இறக்கினால் புகழும் வெற்றியும் பெறுவான்?**

**- எஸ்.மருதீஸ்வரி, மங்களூர்**

**ஞானகுரு :**

குழந்தைக்கு உடல் பலத்தைவிட மன பலம்தான் அவசியம். அதனால் உன் குழந்தைக்கு முதலில் பரமபதம், தாயம், ஆடு புலி ஆட்டம் போன்ற விளையாட்டுக்களை அறிமுகம் செய். தொட்டுவிடும் தூரத்தில் வெற்றி இருக்கும்போது ஒற்றைப் பாம்பு தட்டிவிடலாம் என்ற உண்மை புரிய வேண்டும். தோல்வி, வெற்றி இரண்டையும் சகஜமாக ஏற்றுக்கொள் ளும் மனநிலை மகனுக்கு வந்ததும், தேர்வு செய்யும் பொறுப்பை அவனுக்குக் கொடு. விளையாட்டு என்பது வெற்றிக்காகவும் புகழுக்காகவும் அல்ல என்பதை புரிந்துகொள்பவனால்தான் வெற்றி பெறமுடியும்.

**? முன்னேற்றப் புத்தகங்கள் படித்தால் வாழ்வில் வெற்றி பெற முடியுமா?**

**- பி.சிவசுப்பிரமணி, பெரம்பலூர்.**

**ஞானகுரு :**

ஏணிகள் உயர்வது இல்லை என்றாலும் இயங்குபவனுக்கு உதவி செய்யும். வெற்றி பெறுவதற்கு ஏதாவது ஒரு வழி கிடைக்காதா என்று புத்தகங்களில் இன்று தேடுபவன், நாளை வாழ்விலும் தேடுவான். தேடினால் கண்டடைவீர் என்பது வேத வாக்கு.



www.gyanaguru.com



**? கற்புடைய பெண்கள் பெய்யெனப் பெய்யுமா மழை?**

**- சி.ராஜவேல், மதுரை**

**ஞானகுரு :**

மழையை ரசிக்கச் சொன்னால் பழிக்கிறாய். இயற்கையை உன் அடிமை என்று நினைக்கிறாயா? கற்பை சோதித்தே தீரவேண்டுமாயின், உன் தாயிடம் இந்தக் கேள்வியைக் கேள்.

**? எனக்கு இப்போது கிரகநிலை சரியில்லை. சூரியன் நீச்சம் அடைந்திருப்பதால் குடும்பத்தில் யாருக்கேனும் மரணம் நிகழுமோ என்று அச்சமாக இருக்கிறது. இதில் இருந்து எப்படி தப்பிப்பது?**

**- என்.ரவீந்தரன், சென்னை.**

**ஞானகுரு :**

பிரமாண்டத்திலும் பிரமாண்டமான கிரகங்கள் தங்கள் வேலையை செவ்வனே செய்கின்றன. அதன் பார்வையில் மனிதர்கள் கேவலமான துகள்கள். அப்படிப்பட்ட கிரகங்கள் உன்னுடைய வாழ்க்கையை ஒரு பொருட்டாக மதித்து திசை திருப்புகிறது என்று நீ நம்பினால், உன்னை கடவுளாலும் காப்பாற்ற முடியாது.



**? ஆதி சங்கரர், ராமானுஜர், ராமகிருஷ்ணர், ஷீரடி சாய்பாபா, மகா பெரியவர் என்று எத்தனையோ குருமார்கள் சர்ச்சை இன்றி நடமாடிய நாடு இது. இன்றைய ஆன்மிகவாதிகள் மீது மட்டும் ஏன் இத்தனை குற்றச்சாட்டுகள்?**

**- காவேரி மாணிக்கம், காஞ்சிபுரம்**

**ஞானகுரு :**

இறந்துபோன ஒருவரைப் பற்றித் தவறாகப் பேசக்கூடாது என்பது நம் பண்பாட்டின் கேவலமான மரபு. அதனால்தான் செத்துப் போன சாமியார்கள் புனிதர்களாகவும் இப்போது இருப்பவர்கள் அயோக்கியர் களாகவும் தெரிகிறார்கள். தன்னை கடவுள் என்று சொல்பவனும், தன்னை கடவுள் போல் பூஜிக்க அனுமதிப்பவனும் நிச்சயம் புனிதமானவன் இல்லை. ஐம்பது வருடங்கள் கழித்து இன்றைய சாமியார்கள் எல்லாம் புனிதர்களாக போற்றப்பட்டாலும் ஆச்சர்யம் இல்லை.



**? புத்தர் மனிதனா, கடவுளா..?**

**- சி.மதிவாணன், செங்கல்பட்டு.**

**ஞானகுரு :**

‘நான் தேவனோ அவதாரமோ இல்லை. புத்த நிலையை அடைந்த ஒரு மனிதனே நான். புவியில் பிறந்த மனிதராகிய நீங்கள் அனைவருமே புத்த நிலையை அடைய முடியும்’ என்று வெளிப்படையாகச் சொன்னவர்தான் கௌதம புத்தர். பசியும், தூக்கமும், வலியும், மரணமும் கொண்ட மனிதர்கள் யாருமே கடவுள் ஆகமுடியாது.



**? சித்தர்கள் இன்னமும் இருக்கிறார்களா?**

**- ஜே.எம்.பிரசன்னா, மதுரவாயல்.**

**ஞானகுரு :**

சித்தர்கள் நேற்று இருந்தார் கள் என்றால் இன்றும் இருப்பார்கள். நாளையும் இருப்பார்கள். காவி உடையி லும் நீண்ட தாடியிலும் சித்தரைத் தேடவேண்டாம். யார் கண்டது... நீயும் சித்தராக இருக்கலாம்.

www.gyanaguru.com

# தீப்
## ஒளி எங்கே போனது?



**கோ**யில் பிரகாரத்தில் சாய்ந்திருந்த ஞானகுருவை சந்தித்தார் ஒரு துறவி. அதாவது துறவி வேடத்தில் கோயில் வாசலில் பிச்சை எடுக்கும் பரதேசி என்பது பளீச்சென தெரிந்தது. ஞானகுருவின் அருகே வந்து அமர்ந்தவர், நேரடியாகவே கேள்விக்கு வந்தார்.

"சாமி... நான் போன பிறவியில என்னவா பிறந்திருந்தேன்?"

"நாலு வேளைக்கு முந்தி சாப்பிட்ட, சாப்பாடு என்னன்னு ஞாபகத்துல இருக்கிறதில்ல. சின்ன வயசுல யார் யார் மடியில படுத்துத் தூங்கினோம், யாரு சோறு ஊட்டுனாங்கன்னு யோசிக்க முடியறதில்ல. இதுல போன பிறவியை எப்படிக் கண்டுபிடிக்கிறது?"

இப்படி ஒரு பதிலை ஞானகுரு சொன்னதில் அவருக்கு கொஞ்சம் அதிர்ச்சி... அதிருப்தி. விட்டேத்தியாகப் பதில் சொல்வதுதான் தேர்ந்த சாமியார்களுக்கு அழகு என்று நினைத்துத் திருப்திபட்டுக் கொண்டாரோ என்னவோ, சுதாரித்துக் கொண்டு மீண்டும் கேள்வியைத் தொடர்ந்தார்.

"சாமி... நீங்க இமயமலை, காசிக்கு எல்லாம் போயிட்டு வந்தவர்னு சொல்லிக்கிறாங்க. அப்படின்னா கண்டிப்பா உங்களுக்கு முன் ஜென்மத்தைக் கண்டுபிடிக்கிற சக்தி இருக்கும்..."

"போன ஜென்மத்து வாசனையைக் கண்டுபிடிக்கும் மூலிகை ஏதாவது இமயமலை, காசியில் இருக்குதா என்ன?"

''தப்பாக் கேட்டிருந்த மன்னிக்கணும் சாமி... முற்பிறவியைக்கூட தெரிஞ்சுக்காம காவியைக் கட்டிக்கிறதுல என்ன அர்த்தம் சாமி இருக்கு. ஏனோ ரொம்பநாளாவே இந்த கேள்வி என் மனசை அரிச்சிக்கிட்டே இருக்குது. இது தெரிஞ்சுக்கிட்டா நிம்மதியா செத்துப்போகலாம்னு தோணுது. உங்களுக்கு எல்லாமே தெரியும். ஆனா, அதைத் தெரிஞ்சுக்கிற தகுதி எனக்கு இல்லைன்னு நீங்க நினைக்கிறீங்க. என்ன இருந்தாலும் நான் சாமியார் மாதிரி இருக்குற பரதேசிதானே..!" என தன்னைத்தானே நொந்து கொண்டார். அவரை சமாதானப் படுத்தும் விதமாக பேசத்தொடங்கினார் ஞானகுரு.

"இந்த உலகத்தில் தோன்றிய உயிர்கள் எல்லாமே இறந்துவிடும், ஆனால் அழிந்து விடாது"

"புரியலீங்களே.."

"ஒரு மரம் தன்னுடைய காலம் முடிந்ததும் அழிந்து விடுகிறது, ஆனால் தன்னுடைய விதைகளைப் பிரப்பி ஆயிரக்கணக்கான மரங்களா மறுபிறவி எடுக்கிறது. இது நமது கண்களுக்கே நன்றாகத் தெரிகிறது. விதைகளாக மட்டும் மறுபிறவி எடுப்பது இல்லை. அதனை வெட்டி எரிக்கும்போதோ அல்லது புதைக்கும் போதோ, அது வேற ஒண்ணோட கலந்து இன்னொண்ணா மாறிடுது. ஆனாலும், இந்த பூமியில் வேறு வடிவில் இருக்கவே செய்கிறது. மனுஷன் செத்துப் போனாலும் அவன் உடம்புல இருக்கிற கோடிக்கணக்கான செல்களும் ஏதாவது ஒண்ணா மாறிடுது, இல்லைன்னா காத்தோட காத்தா கரைஞ்சி இங்கேதான் சுத்தி வருது. அதனால, எந்தப் பிறவிக்கும் முழுமையான அழிவுங்கிறது இல்ல..."

"அப்படின்னா நம்ம உசுர் எங்கே போகுது சாமி?"

"ஒரு தீபம் அணைஞ்சா அதோட ஒளி எங்கே போகுது? அதுக்கு முந்தி அந்த தீபத்தை வைச்சு எத்தனையோ விளக்குகளை கொளுத்தினோமே... அந்த ஜோதி எல்லாம் அதுக்கு முந்தி எங்கே இருந்திச்சு..? சரி, இதை எல்லாம் தெரிஞ்சிக்கிறதுல உங்களுக்கு என்ன லாபம்?"

படபடவென கன்னத்தில் போட்டுக் கொண்டவர்,

"சாமி... நீங்க சொல்றது எல்லாமே புரியுற மாதிரி இருக்குது, புரியாமலும் இருக்குது. இருந்தாலும் எனக்காக நீங்களே கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன். நான் போன பிறவியில என்னவா இருந்தேன்னு?'' கேள்வியில் விடாப்பிடியாக இருந்தார், அவர்.

அவருக்குத் தேவை தத்துவம் அல்ல... அவர் விரும்பும் பதில். என்ன பேசினாலும், செக்குமாடு மாதிரி ஒரே இடத்தில்தான் வந்து நிற்பார் என்பது புரிந்தது. என்ன சொன்னால் அவர் திருப்தியாவார் என்று கண்களை மூடி யோசித்தார்


''நீ போன பிறவியில் மீனவ குடியில் பிறந்தாய். ஆனால் மீன் பிடிப்பதை விரும்பாமல் சமையல்காரனாக இருந்தாய். ஏராளமான மனிதர்கள் வயிறாற உண்டு, மனதார வாழ்த்தியதால் மறுபடியும் மனிதனாகப் பிறந்துவிட்டாய். அதனால்தான், எந்த வேலையும் செய்யாமல் உக்கார்ந்து சாப்பிடும் யோகமும் உனக்கு வாய்த்தது.

பலருக்கு சோறு போட்டு புண்ணியம் தேடிய நீ... கட்டிய மனைவிக்கு துரோகம் செய்தாய். பல பெண்களுடன் சம்போகம் செய்தாய். அதனால்தான் வீட்டுக்குள் இருக்கமுடியாமல், தெரு நாய் போன்று ரோட்டில் அலைந்து திரிந்து யாசகம் செய்து சாப்பிடுகிறாய். குடும்பம் இருந்தும் சேரவும் முடியாமல் பிரிந்து கிடக்கவும் முடியாமல் தவிக்கிறாய். இப்படியே அலை பாய்ந்த மனதுடன் திரிந்தால்... அடுத்தது நாய்ப் பிறவிதான்..!'' அவர் கேட்காத எதிர்காலத்தையும் சொல்லி முடித்தேன்.

கண்களில் நீர் வழிய நெடுஞ்சாண்கடையாக ஞானகுரு காலில் விழுந்தார், அந்தப் பரதேசி. அவர் நிமிர்ந்து பார்ப்பதற்குள் அங்கிருந்து விலகியிருந்தார் ஞானகுரு.



# இந்த நொடியில் வாழு..!



ஒவ்வொரு நாள் கண் விழிக்கும்போதும், சந்தோஷத்திற்கு பதிலாக அச்சம் கொள்ளும் மனிதர்கள்தான் அதிகம். அதற்கு முக்கிய காரணம் இன்று என்ன செய்யப்போகிறோம் என்பதல்ல, நாளை என்ன நடக்கும் என்பதுதான்.

’நேற்றைய தினத்தில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள், இன்றைய தினத்தில் வாழுங்கள், நாளைய தினத்தில் நம்பிக்கை வையுங்கள்’ என்று அழுத்தமாக சொல்லியிருக்கிறார் எய்ன்ஸ்டீன். ஆனால் மனிதர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? நாளைய தினத்தில் வாழ்வதற்கு இன்றைய தினத்தை அடகு வைக்கிறார்கள்.

விக்னேஷ்க்கு படிப்பு ஏறவில்லை என்றதும் பணம் புரட்டி துபாய்க்கு அனுப்பி வைத்தார்கள். துபாயில் கட்டிடத்துக்கு கம்பி கட்டும் வேலைக்குத்தான் போனான். கடுமையாக வேலை செய்து, சிக்கனமாக செலவு செய்ததால் விக்னேஷ் கையில் பணம் புழங்கியது. ஊருக்கு பணம் அனுப்பி நிலம் வாங்கிப் போட்டான். பழைய வீட்டை இடித்துக் கட்டினான். வசதி அதிகரித்தது தெரிந்ததும் விக்னேஷ்க்கு பெண் தருவதற்கு நிறைய பேர் போட்டி போட்டார்கள்.

விடுப்பு போட்டு துபாயில் இருந்து வந்த விக்னேஷ்க்கும் சாந்திக்கும் திருமணம் வெகுவிமரிசையாக நடந்தது. கணவனை உருகிஉருகி காதலித்தாள் சாந்தி. எல்லாம் இரண்டு மாதங்கள்தான். மீண்டும் துபாய் போகிறேன் என்று பெட்டியைக் கட்டினான் விக்னேஷ். இங்கே இருக்கும் நிலத்தில் விவசாயம் செய்யலாம் அல்லது பணத்தை வைத்துக்கொண்டு சின்னதாக தொழில் செய்யலாம் என்று உற்றாரும் உறவினரும் நிறையவே ஆலோசனை சொன்னார்கள். ஆனால் விக்னேஷ் எதையும் கேட்டுக்கொள்ளவே இல்லை.

இன்னும் ஐந்து ஆண்டுகள் துபாயில் வேலை செய்து திரும்பினால், வாழ்நாள் முழுவதும் உட்கார்ந்துகொண்டே சாப்பிடலாம் என்று சமாதானம் சொன்னான். தன்னையும் துபாய்க்கு கூட்டிச்செல்லும்படி வற்புறுத்தினாள் சாந்தி. அதெல்லாம் சரிப்படாது என்று தட்டிக்கழித்துவிட்டு துபாய்க்கு கிளம்பினான் விக்னேஷ்.

முன்பைவிட இந்த ஐந்து வருடங்கள் கடுமையாக உழைக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டான். தினமும் கூடுதலாக சில மணி நேரங்கள் வேலை செய்தான். பணம் சம்பாதிக்கும் ஆர்வத்தில் ஊருக்கு போன் பேசுவதைகூட குறைத்துக்கொண்டான். கஷ்டப்பட்டு உழைத்து, பை நிறைய பணத்துடன் ஐந்து ஆண்டுகள் கழித்து ஊருக்குத் திரும்பிவந்தான் விக்னேஷ். ஆர்வமாக வரவேற்றாள் சாந்தி. சம்பாதித்த மொத்த பணத்தையும் ஒரே வங்கிக் கணக்கில் போட்டு பாதுகாக்கச் சொன்னாள். மனைவி சொன்னபடி, ஐந்து வருட உழைப்பையும் ஒரே வங்கியில் போட்டு வைத்தான் விக்னேஷ்.

அடுத்த நாள் மார்க்கெட்டுக்குப் போய் நாட்டுக் கோழி வாங்கி வாட்டி எடுத்துவருகிறேன் என்று கிளம்பிய சாந்தி, மதியம் வரை வரவே இல்லை. வீட்டில் அத்தனை பேரும் தேடிப் பார்த்தார்கள். அப்போதுதான் வீட்டில் அவளுடைய புடவை, நகைகள் எதுவுமே இல்லை என்பது தெரியவந்தது. பதறியபடி வங்கிக்குப் போனான் விக்னேஷ். முழு பணத்தையும் விக்னேஷின் பொய் கையெழுத்து போட்டு சாந்தி எடுத்துப் போய்விட்டாள். ஆம், யாரோ தூரத்து உறவினர் ஒருவனுடன் ஓடிப்போய்விட்டாள் சாந்தி. ஒட்டுமொத்த பணம் மட்டுமின்றி, தன்னுடைய எதிர்காலமும் கேள்விக்குறியான அதிர்ச்சியில் உறைந்துவிட்டான் விக்னேஷ். அடுத்து விக்னேஷ் எந்த வேலைக்கும் போகவில்லை. எதற்காக வேலைக்குப் போகவேண்டும், எதற்காக சம்பாதிக்க வேண்டும் என்று தன்னைத்தானே கேள்வி கேட்டுக்கொண்டான். ஒரு பிச்சைக்காரன் போல் கிடைத்ததை தின்று வாழ்ந்துவருகிறான். இது ரத்தமும் சதையுமாக வாழும் ஒரு மனிதனின் நிஜம்.

எதிர்கால கனவுடன் உழைக்கும் அத்தனை ஆண்களின் மனைவிகளும் ஓடிப்போவார்கள் என்று எச்சரிப்பதற்கு விக்னேஷ் கதையை சொல்லவில்லை. நிகழ்காலத்தில் வாழாமல் எதிர்காலத்தில் மட்டும் வாழ நினைப்பவர்களுக்கு, அப்படியொரு காலம் வராமலே போகலாம் என்பதை உணர்த்துவதற்காக சொல்லப்பட்ட கதை.

**மந்திரச்சொல்**

நேரமும், வாய்ப்பும் எல்லோருக்கும் எப்போதும் இருக்கவே செய்கிறது. முயற்சி எடுப்பவர்கள் கண்களுக்கு மட்டுமே அது புலப்படும்.

நேற்று என்பது உடைந்துபோன கண்ணாடி பாத்திரம். அதனை பத்திரமாக பாதுகாப்பதால் எந்த பயனும் இல்லை. இன்று என்பது கையில் இருக்கும் ஆப்பிள் பழம், இப்போது ரசித்து ருசித்து சாப்பிட முடியும். சாப்பிடாமல் வைத்திருந்தால் கெட்டுப்போகலாம். நாளை என்பது பெருங்கனவு. நல்லதாக அல்லது கெட்டதாக தோன்றும் கனவுகளால் எந்த பிரயோஜனமும் கிடையாது. கனவில் பார்த்த வசதி, சந்தோஷம் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் இன்றைய சந்தோஷத்தை இழப்பது முட்டாள்தனம். அதனால் அன்றன்று கிடைக்கும் மகிழ்ச்சியை சந்தோஷமாக அனுபவிப்பதுதான் வாழ்க்கை.

**? படிப்பு, வேலை, திருமணம் போன்ற திட்டமிடுதல் எல்லாமே எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்பதற்குத்தானே..?**

படிப்பு என்பது அறிவை விருத்திசெய்யும் செயல். வாழும் ஒவ்வொரு கணமும் உன் அறிவை விரிவுபடுத்தித்தான் ஆகவேண்டும். இன்றைய காலத்திற்கேற்ப நவீனமாக மேம்படுத்திக்கொள்வது அவசியம். அதுபோல் வேலை செய்தால்தான் அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும். உண்ண உணவும் உடுக்க உடையும் தங்குவதற்கு இடமும் கிடைப்பதற்காக வேலை செய்துதான் ஆகவேண்டும்.

ஒரு செல் உயிரியில் இருந்து உலகிலேயே பெரியதான திமிங்கலம் வரையிலுமான அத்தனை உயிர்களுக்கும் இருக்கும் அடிப்படை குணங்களில் ஒன்று சந்ததியை பெருக்குதல். அறிந்தும்

www.gyanaguru.com
www.gyanaguru.com

நான் படித்து டாக்டராகப் போகிறேன் என்று ஆசைப்படுவது நியாயமே. இந்த ஆசை தவறும் அல்ல. ஆனால் பத்தாம் வகுப்பு படிக்கும்போது, மருத்துவப் படிப்புக்கான புத்தகத்தைப் படிக்க முயற்சிப்பது அபத்தமான செயல்.

அறியாமலும் இந்தப் பணியை அத்தனை உயிர்களும் செய்கின்றன. அதனால் திருமணம் என்பதையும் குழந்தை பிறப்பையும் இன்றைய செயலாகத்தான் பார்க்கவேண்டும்.

**? அப்படியென்றால், எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டாமா?**

சேமிப்பு அவசியம். ஆனால் இன்றைய வாழ்க்கை அதைவிட முக்கியம். ஒரு வகையில் மனித வாழ்க்கையை இயந்திரத்தோடு ஒப்பிடலாம். இயந்திரத்தை முறையாகவும் சரியாகவும் பராமரித்தால் மட்டுமே எதிர்பார்த்த பலன் எதிர்காலத்தில் கிடைக்கும். இயந்திரத்தை ஜாக்கிரதையாக பாதுகாப்பதாக நினைத்து, நீண்டகாலம் மூடி வைத்திருந்தால், மோட்டார் முதலான பாகங்கள் துருப்பிடித்து எதற்குமே பயன்படாமல் போய்விடும். இயந்திரத்திற்கு போதிய ஓய்வு கொடுத்து, சின்னச்சின்ன பழுதுகளை அவ்வப்போது சரிசெய்து, தொடர்ந்து பராமரிப்பு செய்துவந்தால் மட்டுமே, பிரச்னை இல்லாமல் இயந்திரம் ஓடும். அதனால் இன்றைய வாழ்க்கையை அனுபவிக்காமல் எதிர்காலத்திற்காக சேமிக்க நினைப்பது சரியல்ல, இன்றைக்குப் போக சிதறியவற்றை சேமித்தால் போதும்.

**? எதிர்காலம் நிம்மதியாக அமைய எவ்வளவு சேமிக்க வேண்டும்?**

இன்னும் சில காசுகள் போட்டாலே நிரம்பிவிடும் போல் தோற்றமளிக்கும் மாய உண்டியல்தான் எதிர்காலம். எத்தனை காசு போட்டாலும் உண்டியல் நிரம்பவே செய்யாது என்பதுதான் உண்மை. அதனால் நீ எதிர்காலத்திற்காக எவ்வளவு சேமித்து வைக்கிறாய் என்பது முக்கியமே அல்ல. ஒரு பைசாகூட இல்லாதவன் தன் வாழ்நாளை நிம்மதியாக வாழ்ந்துமுடிக்கலாம். பெரிய கோடீஸ்வரன் பணம் போதாமல் விழிபிதுங்கலாம். அதனால் நிச்சயமற்ற பயணத்துக்காக உன்னை அதிகம் சிரமப்படுத்திக் கொள்ளாதே.

**? எதிர்கால ஆசை இல்லையென்றால் வாழ்க்கையில் பிடிப்பு, நம்பிக்கை ஏற்படாதே...?**

நான் படித்து டாக்டராகப் போகிறேன் என்று ஆசைப்படுவது நியாயமே. இந்த ஆசை தவறும் அல்ல. ஆனால் பத்தாம் வகுப்பு படிக்கும்போது, மருத்துவப் படிப்புக்கான புத்தகத்தைப் படிக்க முயற்சிப்பது அபத்தமான செயல். இப்போது ஒரு மாணவனாக உன்னுடைய கடமையானது, பத்தாம் வகுப்பில் நன்றாக படித்து, நிறைய மதிப்பெண்களுடன் தேர்ச்சி அடைந்து மருத்துவம் படிப்பதற்கான அறிவியல் பிரிவில் இடம் பிடிப்பதுதான். இதுதான் இன்று செய்யவேண்டிய பணி. அதனால் மருத்துவ ஆசை இருந்தால் பத்தாம் வகுப்பில்தான் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.



இதைவிடுத்து சின்ன வயதிலேயே எதிர்கால கனவில் மூழ்குவது அபாயமே. ஏனென்றால் பனிரெண்டாம் வகுப்பு முடிக்கும்போது உனக்கு மருத்துவத் துறையில் ஆர்வம் குறைந்திருக்கலாம் அல்லது போதிய மதிப்பெண் எடுக்க முடியாமல் போகலாம். மனதில் முடிந்துவைத்திருந்த ஆசை நிறைவேறவில்லை என்றதும் நிலைகுலைய அவசியம் இல்லை. ஏனென்றால் நீ மருத்துவம் படிக்கவில்லை என்பதால் உன் வாழ்க்கை முடிந்துவிடப் போவதில்லை. அதைவிட சிறப்பான எதிர்காலம் அமையலாம். அதனால் இன்றைய தினத்தில், இன்றைய நேரத்தில், இந்த நொடியில் சந்தோஷமாக வாழ்ந்து பழகு. எதிர்காலமும் சிறப்பாகவே அமைந்துவிடும். ●

www.gyanaguru.com



# அந்த 20 வருடம்..!



அவள் சின்ன வயதில் இருந்தே இனிப்பு பிரியை. அதனால் சாக்லேட், பிஸ்கட் என எப்போதும் இனிப்பு அவளிடம் இருந்துகொண்டே இருக்கும். அதனாலோ என்னவோ, 35 வயதிலேயே சர்க்கரை நோயாளி ஆகிவிட்டாள்.

சர்க்கரை நோய்க்குப்பிறகும் இனிப்பு சாப்பிடுவதை கைவிட முடியாமல், மருத்துவரிடமும் கணவரிடமும் எப்போதும் திட்டு வாங்கிக்கொண்டே இருந்த நிலையில், ஞானகுருவை சந்தித்தாள். தன்னுடைய இக்கட்டான நிலைமையைத் தெரிவித்தாள். நீ இனிப்பு சாப்பிட வேண்டும் என்றால் அதில் தவறே இல்லை, ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. உனக்கு எந்த விலங்கு நிரம்பப் பிடிக்கும் என்று கேட்டார்.

‘‘நாய் எனக்கு மிகவும் பிடிக்கும், நாயுடன் விளையாடுவது ரொம்பவும் பிடிக்கும்’ என்றாள்.

‘‘சரி, நீ இனிப்பு சாப்பிட விரும்பும் நேரத்தில் எல்லாம் அந்த நாயை மட்டும் நினைத்துக்கொள். ஆனால், அந்த நாய் இன்னும் 20 வருடங்களில் எப்படியிருக்கும் என்பதை மட்டும் யோசித்து, அதை நினைத்துக்கொண்டே சாப்பிடு..’

‘இருபது வருடங்களா? அதற்குள் செத்துவிடும். அப்படியில்லை என்றால் அந்த நாய் கிழடாகி, பார்க்கவே கொடூரமாக சகிக்க முடியாமல் இருக்குமே.. அதை எப்படி நினைத்துக்கொண்டு சாக்லேட் சாப்பிடுவது?’’

‘‘இனிப்பு சாப்பிடுவதை நிறுத்தாவிட்டால், நீயும் 20 வருடங்கள் கழித்து அப்படித்தான் இருப்பாய். இனிப்பு மட்டுமல்ல, எந்த ஒரு விஷயம் நீ செய்வதாக இருந்தாலும், அதன் பலன் 20 வருடங்கள் கழித்து எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார். அதன்பிறகு அந்த காரியத்தை செய்.

இனி, நீ எவ்வளவு இனிப்பு வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால், அந்த நேரத்தில் உன் கிழட்டு நாயை கற்பனை செய்வதை மட்டும் மறந்துவிடாதே’ என்றபடி கிளம்பினார் ஞானகுரு. 20 வருடங்கள் கழித்து நீரிழிவு நோயுடன் தான் எப்படியெல்லாம் அவஸ்தைப்பட நேரிடலாம் என்று கொஞ்சம் யோசித்துப் பார்த்தாள். அந்த கிழட்டு நாயைவிட, மோசமான நிலையாக இருந்தது. அதனாலோ என்னவோ, அதன்பிறகு இனிப்பு சாப்பிட ஆசை வரவே இல்லை. ●

# பட்டாம்பூச்சி புன்னகை

வண்ணத்துப்பூச்சியை ரசிக்காதவர்கள் யாராவது இருப்பார்களா? குழந்தை முதல் முதியவர் வரை எல்லோருமே அதன் அழகில் மயங்குபவர்கள்தான். ஆனால் இப்போது வண்ணத்துப்பூச்சியை எங்கே தேடுவது என்று கவலையா? உன் எதிரே நிற்பவரின் முகத்தில் தேடு... நிச்சயம் கண்டடைவாய்.

ராகவியின் நிறம் கருப்பு. போதாக்குறைக்கு அவளுக்கு படிப்பும் ஏறவில்லை. அதனால் +2 முடித்ததும் திருமணம் முடித்துக்கொடுக்க வீட்டில் முயற்சி எடுத்தார்கள். மாப்பிள்ளையாக வந்த நபர்கள் எல்லாம் அவளது கருப்புக்கும், படிப்பின்மைக்கும் சேர்த்து ஏகப்பட்ட நகை கேட்டார்கள். அதனை கொடுக்கமுடியாமல், வீட்டிலும் வைத்திருக்க முடியாமல் அவளை வேலைக்கு அனுப்பினார்கள்.

ஒரு எக்ஸ்போர்ட் நிறுவனத்தில் தினக்கூலியாக வேலை செய்தாள் ராகவி. தானுண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவள். அவளுக்கு அருகே வேலை செய்யும் சில பெண்கள் எந்த நேரமும் சிரிப்பும், கேலியும் கிண்டலுமாக இருப்பார்கள். ஆனால் ராகவி குனிந்த தலை நிமிரமாட்டாள். சரியான நேரத்துக்கு வந்து சரியான நேரத்துக்கு வீட்டுக்குப் போய்விடுவாள். யாரிடமும் அநாவசியமாக எதையும் பேசவும் மாட்டாள்.

ராகவி வேலை செய்யும் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தாள் செண்பகம். வேலை செய்யும் அத்தனை பெண்களும் சிரித்துக்கொண்டிருக்க, அதில் கலந்துகொள்ளாமல் தனித்து வேலை பார்க்கும் ராகவியை நினைத்து பரிதாபப்பட்டாள். அவளுடன் பேசத் தொடங்கினாள். கேட்ட கேள்விகளுக்குப் பதில் பேசுவதற்கே தயங்கினாள் ராகவி. ஒருவழியாக இருவருக்கும் கொஞ்சம் நெருக்கம் ஏற்பட்டது.

நீ ஏன் எப்போதும் முகத்தை உர்ரென்று வைத்திருக்கிறாய்., கொஞ்சம் சிரித்தால் என்ன?

நான் சிரிக்கவில்லை என்று இங்கே யார் அழுதது? நான் கருப்பாக இருக்கிறேன் என்பதால் என்னை இங்கே யாருக்கும் பிடிப்பதில்லை. நான் வேலைக்கு சேர்ந்த புதிதில் எல்லோருடனும் பேசிப்பழக ஆசைப்பட்டேன். முதல் நாள் எல்லோரையும் பார்த்து சிரித்தேன். ஆனால் யாரும் என்னை மதிக்கவே இல்லை. அதனால்தான் நான் யாரிடமும் பேசுவதும் இல்லை, சிரிப்பதும் இல்லை என்று மனதில்





www.gyanaguru.com

இருப்பதை எல்லாம் கொட்டித்தீர்த்தாள்.

உன்னைப் பற்றி நீயே தாழ்வு மனப்பான்மை கொண்டிருக்கிறாய். உன் மீது குற்றத்தை வைத்துக்கொண்டு அடுத்தவர் மீது பழி போடாதே என்றாள் செண்பகம். ஆனால் இதை ராகவி ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அடுத்த ஒரு மாதம் கண்ணில் தென்படும் அத்தனை பேரையும் கண்டு ராகவி புன்னகை புரியவேண்டும், அதன்பிறகும் மாற்றம் எதுவும் நிகழவில்லை என்றால் ராகவி சொல்வதுதான் உண்மை என்று ஏற்றுகொள்வதாக சொன்னாள் செண்பகம். அதனை நடைமுறைக்கு கொண்டுவந்தாள் ராகவி.

அடுத்தநாள் வேலைக்கு வந்ததும் வாசலில் நிற்கும் வாட்ச்மேனைக் கண்டு புன்னகை புரிந்தாள். அதிசயமாக பார்த்தான். அன்று முழுவதும் கண்ணில் கண்ட அத்தனை பேரிடமும் புன்னகை புரிந்தாள். அனைவரும் ஆச்சர்யப்பட்டார்களே தவிர, அவர்கள் பதிலுக்கு புன்னகை புரியவில்லை. உடைந்தே போனாள் ராகவி. இதனை நாளையும் தொடரத்தான் வேண்டுமா என்று ரொம்பவும் யோசித்தாள். ஆனாலும் செண்பகம் வற்புறுத்தல் காரணமாக மேலும் தொடர்ந்தாள்.

அடுத்தடுத்த சில நாட்கள் ராகவிக்கு அதே அனுபவம்தான் கிடைத்தது. அடுத்த வாரத்தின் முதல் நாள் வாட்ச்மேனுக்கு புன்னகை புரிவதா வேண்டாமா என்று யோசித்துக்கொண்டே நெருங்கும்போதே... அவளைப் பார்த்து ஒரு சல்யூட் வைத்தான். ஆச்சர்யமானாள் ராகவி. பெரிதாக புன்னகை புரிந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக மற்றவர்களும் அவளுக்கு முன்னரே புன்னகைக்கத் தொடங்கினார்கள். அப்புறமென்ன சில நாட்களில் மற்ற பெண்களைப் போலவே சிரிக்கவும் கொண்டாடவும் கற்றுக்கொண்டாள் ராகவி. இப்போது ராகவி தன்னுடைய கருப்பு நிறத்தைக் கண்டு கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. ஏனென்றால் அவளிடம்தான் புன்னகை என்ற அற்புதமான ஆயுதம் இருக்கிறதே...



இன்டர்வியூ நடக்கும் இடங்களுக்குப் போயிருக்கிறீர்களா? ஒரு நாளில் ஏராளமான நபர்களை கழிக்க வேண்டியிருக்கும், ஒருசிலரை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். ஆனால் நேர்முகத்தேர்வு என்பது ஒருசில நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும். அப்படியிருக்கும்போது எப்படி ஆட்களைத் தேர்வு செய்கிறார்கள்?

யாருடைய முகத்தில் பட்டாம்பூச்சி பறக்கிறது என்பதைத்தான் பார்க்கிறார்கள். புன்னகையும் நம்பிக்கையும் இருப்பவன் முகத்தில் நிச்சயம் மலர்ச்சி தெரியும். நெருக்கடியான நேர்முகத் தேர்வு நேரத்திலும் புன்னகையுடன் இருப்பவனால் நிச்சயம் பல சாதனைகள் செய்துவிட முடியும். மனம் உறுதியாகவும் தெளிவாகவும் இருந்தால் முகத்தில் அது நிச்சயம் பிரதிபலிக்கும். முதல் பார்வையிலே ஒருவர் மீது நம்பிக்கையும் அன்பும் வரவேண்டும் என்றால் அந்த முகத்தில் புன்னகை நிலவ வேண்டும். முதல் பார்வையில் ஒருவரை கவரமுடியவில்லை என்றால், கடுமையான முயற்சிகளாலும் அவரை கவரமுடியாது.

## முகத்தில் பட்டாம்பூச்சி பறக்குமா என்ன?

குழந்தைகளின் முகத்தைப் பாருங்கள். நல்லவன், கெட்டவன் என்ற பாகுபாடு பார்க்காமல் யாரைப் பார்த்தாலும் பூவைப் போன்று சிரிக்கும். யார் கூப்பிட்டாலும் அவர் கைக்குத் தாவும். குழந்தைக்கு மட்டும் அது எப்படி சாத்தியமாகிறது? குழந்தையின் மனதில் எந்த கல்மிஷமும் தில்லுமுல்லுவும் இல்லை. எதிர்காலம் குறித்த அச்சமும் இல்லை, கனவும் இல்லை. அதனால்தான் குழந்தையின் முகம் பௌர்ணமி நிலவு போல் ஜொலிக்கிறது. காணும் அனைவரையும் கவர்ந்து இழுக்கிறது.

நான் படித்து டாக்டராகப் போகிறேன் என்று ஆசைப்படுவது நியாயமே. இந்த ஆசை தவறும் அல்ல. ஆனால் பத்தாம் வகுப்பு படிக்கும்போது, மருத்துவப்





## மந்திரச்சொல்

நீ தலைவனாக இருக்கவேண்டும் என்றால், துன்பங்களை தனி நபராக எதிர்கொள்ளும் தைரியம் வேண்டும்.

## குழந்தைகளுக்கு பிரச்னைகள் கிடையாது, ஆனால் மற்றவர்களுக்கு அப்படியில்லையே?

பிரச்னை இல்லாத மனிதன் இந்த உலகத்தில் யாரும் இல்லை. கோடீஸ்வரனாக இருப்பவனுக்கும் ஆயிரத்தெட்டு பிரச்னைகள் உண்டு. எத்தனை நஷ்டம் வந்தாலும் குடி முழுகப் போவதில்லை என்றாலும் உழைத்துக்கொண்டு இருக்கிறான். பிரச்னைகளில் சிக்கித் தவிப்பவர்கள் வயிறு பசிக்கும்போது சாப்பிடுகிறார்கள். கண்ணை சுழட்டும்போது தூங்குகிறார்கள். ஏகப்பட்ட பிரச்னை இருக்கிறது என்பதற்காக அடிப்படை தேவைகளை நிறைவேற்றாமல் இருப்பதில்லை. ஆனால் அவ்வப்போது புன்னகைத்தால் மட்டும் குறைந்தா போவார்கள்.

## புன்னகைக்கும் பட்டாம்பூச்சிக்கும் என்ன தொடர்பு?

ஒவ்வொரு முறை நீ புன்னகை சிந்தும்போதும் முகத்தில் நூற்றுக்கணக்கான பட்டாம்பூச்சிகள் பறக்கும். உன் முகத்தில் பறக்கும் பட்டாம்பூச்சிகளைப் பார்ப்பவர்களின் முகத்திலும் சந்தோஷம் வரும். அவர்களும் புன்னகை புரிவார்கள், அவர்கள் முகத்திலும் பட்டாம்பூச்சி பறக்கும். இந்த புன்னகை ஒரு சங்கிலி போன்று பரவி, அத்தனை மனிதர்கள் முகக்திலும் பட்டாம்பூச்சிகளைப் பார்க்க முடியும். புன்னகை சிந்தும் மனிதன் அழகாகத் தெரிவான். அவன் முகத்தைப் பார்க்கும் எவருக்கும் எதையும் மறுக்கத் தோணாது. இன்று மக்கள் மனதை கொள்ளையடித்திருக்கும் சினிமா நட்சத்திரங்களில் இருந்து அரசியல்வாதிகள் முகம் வரையிலும் கண்ணை மூடி நினைத்துப் பாருங்கள். அவர்களுடைய சிரித்த முகம்தான் கண்ணுக்கும் நிற்கும்.

## புன்னகை புரிந்தால் வேறு என்ன கிடைக்கும்?

ஆண்டவனை கும்பிட்டால்கூட என்ன பலன் கிடைக்கும் என்று கணக்குப்போட்டு பார்ப்பதுதான் மக்களின் வாடிக்கைதான். அதனால்தான் புன்னகையால் என்ன பலன் என்று கேட்கிறார்கள். ஆயிரக்கணக்கில் செலவழித்து கச்சிதமாக ஆடையணிவதால் மட்டும் ஒருவர் வசீகரமாக மாறிவிட முடியாது. புன்னகையுடன் சிரித்த முகத்துடன் தோன்றுபவரே அனைவருக்கும் இனியவராக மாறுகிறார். புன்னகையால் எதிரியையும் கவர்ந்துவிட முடியும். புன்னகை புரிபவர்களையே நம்பிக்கையாளராக பார்க்கிறார்கள்.



மேலும், மருத்துவரீதியிலும் உடலுக்கு பலன் இருக்கிறது. புன்னகை மற்றும் சிரிக்கும் போது உடலிலுள்ள அனைத்து பாகங்களும் இயங்குகின்றன, ரத்த ஓட்டம் அதிகமாகிறது, மூளைக்கு ஆக்சிஜன் அதிகம் செலுத்தப்படுகிறது. இதனால் உடல் தசைகள், முக தசைகள் எல்லாம் உற்சாகம் பெறுகின்றன. சிரிக்கும் போது உடலில் லிம்ப் திரவம் வேகமாகப் பரவுகிறது. இது, உடல் உறுப்புகளில் தேங்கிக் கிடக்கும் அசுத்தங்களை வெளியேற்றி, செரிமானக் கோளாறுகளை சரி செய்கிறது. அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்வதால் கிடைக்கும் பயனை, சில நிமிட சிரிப்பில் பெற்றுவிட முடியும் என்பதால்தான், மேலை நாடுகளில் சிரிப்பதற்கே தனியாக வகுப்பு நடத்திவருகிறார்கள்.

## புன்னகை செய்ய நினைத்தாலும் முடியவில்லையே?

சட்டியில் இருப்பதுதான் அகப்பையில் வரும் என்பது நம் தமிழ் பொன்மொழி. உன் மனசுக்குள் ஏராளமான சிக்கல்களும் கசடுகளும் இருந்தால் புன்னகைக்க முடியாது. மனதில் நல்ல எண்ணங்களை மட்டும் வளர்த்துக்கொள். அவநம்பிக்கைகளை மனதில் இருந்து விரட்டு. தேவையற்ற ஆசைகளை வளர்த்துக்கொள்ளாதே. குறிப்பாக யாரையும் எதிரியாக பாராதே. எல்லோரும் நல்லவரே என்ற சிந்தனையை வளர்த்துக்கொள். நல்லவரை எதிரே பார்க்கும்போது புன்னகைக்க முடியாதா என்ன..?

புன்னகை செய், பூமி முழுவதும் பட்டாம்பூச்சிகள் பரவட்டும்.

# மண்ணும் மருத்துவனே...

இந்த மண்ணின் தன்மை என்பது என்னவென்று தெரியாத ஒரு புதிய தலைமுறை உருவாகியுள்ளது. எந்த நேரமும் காலில் செருப்புடன் நடமாடும் தலைமுறைக்கு மண்ணுக்கு உயிர் இருப்பதும், அதன் வாசனையும் தெரியவே செய்யாது.

குழந்தைகள் மண்ணில் விளையாடுவதை எந்த பெற்றோரும் இப்போது விரும்புவதில்லை. செருப்பு இல்லாமல் நடமாடவும் விடுவதில்லை. சிமெண்ட் மற்றும் தார் கொண்டு மூடப்பட்ட சாலைகள் மிகுந்த சுகாதாரக் கேடுடன் திகழ்கிறது என்பது உண்மையாகவே இருந்தாலும், தினமும் ஐந்து நிமிடங்களாவது நல்ல மண்ணில் கால் பதியவேண்டும். அதுவே உடலுக்கு பலம் தரக்கூடியது. அதுவும் ஒரு வகையில் மண் சிகிச்சையே. இரவும் பகலுமாக வயலில் வேலை செய்யும் எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் தோல் வியாதிகள் ஏற்படுவதில்லை, பசியின்மை, ஜீரணக் கோளாறு உருவாவதும் இல்லை. அதற்கு காரணம் மண்ணின் மகிமைதான்.

இன்றைய நாகரிகத்தில் மண்ணில் கால் பதிக்க நேரமும் இடமும் இல்லை என்றாலும், வாரத்தில் ஒரு நாளாவது இயற்கை மண்ணில் எழுப்பப்பட்ட பூங்கா, கடற்கரை, மைதானம் போன்ற இடங்களில் அரை மணி நேரமாவது வெறும் காலுடன் நடைபோட வேண்டும். வெளிநாட்டினர் மண்ணின் மகிமை உணர்ந்ததாலே, மண்ணை உடல் முழுவதும் தடவி, அதனை சிகிச்சையாக எடுத்துக்கொள்கிறார்கள். மண்ணில் நடப்பதும், மணலில் விளையாடுவதும், மண்ணை உடலில் பூசிக்கொள்வதும் உடல் சூட்டைக் குறைத்து, ஜீரணக் குறைபாடுகளை நீக்கக்கூடியது.

முகத்தில் முகப்பரு, கரும்புள்ளி, கீறல்கள் தென்படுகிறதா? கண்ட க்ரீம்களையும் தடவி பணத்தை வீணாக்க வேண்டாமே. சுத்தமான மண்ணை எடுத்து முகத்தில் தண்ணீர் கலந்து பூசி, 30 நிமிடம் கழித்து கண் விழித்தால் நல்ல பலன் கிடைக்கும். இதனை தினமும் கடைபிடிக்கலாம்.

நாம் பொதுவாகவே சமைக்கப்பட்ட உணவுகளை எடுத்துக்கொள்வதால், உடலில் விஷத்தன்மை தேங்கிவிடுகிறது. மண் குளியல், மண்ணில் கால் பதிப்பதும் உடலில் உள்ள விஷத்தன்மையை உறிஞ்சும் தன்மை கொண்டது. மலச்சிக்கல், பசியின்மை, தலைவலி போன்ற நோயில்லாத பிரச்னைகளுக்கும் மண் நல்ல அரு மருந்து. பூமா தேவியை தாயென்று சும்மா சொல்லிவைக்கவில்லை, நம் முன்னோர். தாய்மையும் அன்பும் கொண்ட மண்ணை மதிக்கக் கற்றுக் கொண்டால், அது மருந்தாகவே பயன்படுகிறது.

பஞ்ச பூதங்களுக்கும் உடலுக்கும் எப்போதும் ஏதேனும் வகையில் தொடர்பு இருந்துகொண்டே இருக்க வேண்டும். அதனால், மண்ணை வணங்குகிறோமோ இல்லையோ, மண்ணில் பாதமாவது பதித்து மதிப்போம்.

## மந்திரச்சொல்

வாழ்க்கையில் ஒன்றை இழக்கும்போது, இதைவிட பெரிதாக ஒன்று கிடைக்கப்போகிறது என்ற நம்பிக்கை கொள்.

www.gyanguru.com
www.gyanguru.com




# பணம் மட்டும் போதுமா?

செல்வத்தைக் கண்டதும் ஒரு சாமியார், ‘அச்சோ... பேய்... பேய்’ என்று பயந்து ஓடினார் என்ற கதை வெகுபிரபலம். உண்மையில் பணம் அத்தனை கொடூரமானதா..?

பணத்துக்காக என்னவெல்லாம் நடக்கிறது என்று பார்க்கலாம்.

தான் பெற்ற பிள்ளையை பணத்துக்காக விற்கிறாள் ஒரு தாய். சிறிய தொகை கிடைக்கிறது என்பதற்காக, தனக்கு எந்த தொந்தரவும் தராத ஒரு மனிதனை கொலை செய்கிறான் கூலிப்படையை சேர்ந்தவன். பணம் வேண்டும் என்பதற்காக தன்னுடைய உடலை கொஞ்சநேரம் அடுத்தவனுக்கு தானமாகத் தருகிறாள் பெண். பணத்துக்காக பொது சொத்தை கொள்ளை அடிப்பதற்கு அனுமதி கொடுக்கிறான் அதிகாரி. பணத்துக்காக தாய் நாட்டை காட்டிக் கொடுக்கிறான் ராணுவ அதிகாரி.

ஆனால், இன்று இந்த உலகத்தை ஒரே மனித இனமாக வடிவமைத்ததில் பணத்திற்குத்தான் முக்கிய பங்கு உண்டு. பணம் என்பது நம்பிக்கை தருகிறது. பணம் கிடைக்கும் என்ற உறுதியில், நம்பிக்கையில் ஒருவன் உழைக்கிறான். இந்த பணம் நாளை உதவி செய்யும் என்ற நம்பிக்கையில் சேமித்து வைக்கிறான்.


எல்லாவற்றையும்விட பணத்துக்கு ஒரு மாபெரும் சக்தியுள்ளது. அது எதுவாகவும் உருமாறும் தன்மை கொண்டது. வாஷிங் மெஷின் வாங்க வேண்டுமா? வீடு வாங்க வேண்டுமா? வாகனம் வாங்க வேண்டுமா? உன்னிடம் பணம் இருந்தால் போதும், அது நீ என்ன ஆசைப்படுகிறாயோ அவை எல்லாவற்றையும் கொண்டுவந்து சேர்த்துவிடும். உன்னை சுகவாசியாக, வள்ளலாக, பிச்சைக்காரனாக மற்றவர்களிடம் காட்டுவதும் பணம்தான்.

அதனால், மனிதகுலத்தின் அத்தனை தீமைகளுக்கு மட்டுமல்ல, நன்மைகளுக்கும் காரணம் பணம் மட்டும்தான். பணம் என்பது நெருப்பைப் போன்றது. அதனை நீ எப்படி பயன்படுத்துகிறாய் என்பதில்தான் வெற்றி உள்ளது.

பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள் மீது வைக்கும்

www.gyansguru.com

www.gyansguru.com



> கடைக்குச் சென்றாலும், கோயிலுக்குச் சென்றாலும், மருத்துவமனைக்குச் சென்றாலும் பணக்காரனுக்குத்தான் மரியாதை. அதனால்தான் பணம் சம்பாதிப்பதிலும், அதனை சேமிப்பதற்கும் தன் வாழ் முழுவதையும் செலவழிக்கிறான்.

நம்பிக்கயைவிட, பணத்தின் மீது அதிக நம்பிக்கையை மக்கள் வைத்திருக்கிறார்கள். அதனால்தான், பணத்தை ரகசியமாக பூட்டி வைத்திருக்கிறார்கள்.

திடீரென பணம் செல்லுபடியாகாது என்று அரசு அறிவித்துவிட்டால், அத்தனை பணமும், வெறும் காகிதமாகிவிடும். ஆனாலும், மனிதர்கள் மீது வைக்கும் நம்பிக்கையைவிட பணத்தின் மீதுதான் மக்களுக்கு அதிக நம்பிக்கை. அது தவறும் அல்ல. ஏனென்றால், வெளியூர் செல்லும்போது அங்கே நீ யாருக்கும் தெரியாத ஒரு மனிதனாக இருந்தாலும், பணம் உன்னுடைய மதிப்பைக் கூட்டிக் காட்டிவிடும். நீ விரும்பியதை சாதிக்கவும் முடியும். திடீரென வேலை இழந்துவிட்ட ஒரு மனிதனுக்கு எந்த உறவும் தொடர்ந்து தண்டச் சோறு போடவும் மாட்டார்கள்.

கடைக்குச் சென்றாலும், கோயிலுக்குச் சென்றாலும், மருத்துவமனைக்குச் சென்றாலும் பணக்காரனுக்குத்தான் மரியாதை. அதனால்தான் பணம் சம்பாதிப்பதிலும், அதனை சேமிப்பதற்கும் தன் வாழ் முழுவதையும் செலவழிக்கிறான்.


பணத்தின் மீது நம்பிக்கை வைப்பது நல்லது. அதேநேரம், பணத்தைக் கொண்டு அன்பையும், அரவணைப்பையும் வாங்குவதற்கு முயற்சிக்க வேண்டும். பெற்றோர், மனைவி, குழந்தைகள் ஆகியோரிடம் பணத்தைத் தாண்டியும் அன்பு செலுத்த வேண்டும். அந்த அன்புதான், உன் வாழ்க்கைக்கு துணையாக இருக்கும்.

ஒரு கட்டத்தில் பணத்தின் மீது உனக்கிருக்கும் நம்பிக்கையை, உறவுக்கு மாற்றத் தெரிய வேண்டும். ஆம், வெறுமனே பணத்தை மட்டும் வைத்து வாழ முடியாது. அதேநேரம், வெறும் உறவுகளைக் கொண்டும் வயதான காலத்தைக் கழிக்க முடியாது.

அதனால், ஒருபோதும் பணத்தின் மீது நம்பிக்கையை இழந்துவிடாதே..!

பணம் சேமிக்கவே இல்லையா..? பரவாயில்லை, வாழ்க்கை மீது நம்பிக்கை வை. ஏதாவது நடக்கும்.





# வெற்றி வேண்டுமெனில் பதறாதே...

ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளும் அத்தனை பேரும் வெற்றி அடைய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் டிராக்கில் நிற்கிறார்கள். ஆனால், யாரேனும் ஒருவருக்கு மட்டுமே வெற்றி கிடைக்கிறது. அது யாருக்குத் தெரியுமா..? வெற்றி அடைந்தே தீரவேண்டும் என்ற பதட்டம் இல்லாமல் விளையாட்டை அனுபவித்து இலக்கு நோக்கி ஓடுபவனுக்குத்தான். இதனை தோல்வி அடைந்தவனிடம் கேட்டுப் பார், உண்மை புரியும்.

தன்னை சந்திக்க வந்த, ஒரு நிறுவனத்தின் தலைமை நிர்வாகியிடம், ‘என்ன பிரச்னை?’ என்று கேட்டார் ஞானகுரு.

”இன்று எளிதாக முடியவேண்டிய ஒரு டீல், திடீரென கைவிட்டுப் போனது. காரணம் புரியவில்லை..”

‘‘இந்த டீல் முடித்தே தீரவேண்டும் என்று நினைத்தாயா..?”

‘‘ஆம், அதற்காக இரவு பகலாக உழைத்து சிறப்பாகவே புராஜெக்ட் தயார் செய்து வைத்திருந்தேன். இந்த டீல் முடிந்திருந்தால் எங்கள் கம்பெனிக்கு மிகப்பெரிய லாபமாக இருந்திருக்கும்...”

‘‘வெற்றி பெறவேண்டும் என்ற பரபரப்புடனும் பதட்டத்துடனும் இருப்பவன் ஒருபோதும் வெற்றி அடைய மாட்டான்... பொறியில் சிக்கிய எலியால் ஏன் தப்பிக்க முடிவதில்லை தெரியுமா?”

‘‘அதான் சிக்கிவிட்டதே..”

‘‘இல்லை, இனி தப்பிக்க முடியாது என்று பதட்டமாகிறது. எலியால் சிமெண்ட் தரையையும், மரப் பொறியையும் எளிதாக பற்களால் குடைந்துவிட முடியும். ஆனால், பொறியில் சிக்கியதும் தன் திறமையை மறந்துவிடுகிறது. அப்படித்தான் நீ வெற்றி வேண்டும் என்ற பதட்டத்தில் உன் திறமையைக் காட்ட மறந்துவிட்டாய்...”

‘‘எப்படி ஜெயிக்க வேண்டும்..?”

‘‘இது நல்ல புராஜெக்ட். இந்த நிறுவனத்துடன் இணைந்து நிச்சயம் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தை உன்னுடைய கிளையண்டிற்குத் தூண்ட வேண்டும். அவன் வெற்றி வேண்டும் என்று உன்னிடம் வர வேண்டும். அந்த வகையில் ரிவர்ஸில் பணியாற்று, வெற்றி தானே வரும்...”

நம்பிக்கையுடன் திரும்பிப்போனார் நிர்வாகி.

www.gyanaguru.com

# ஆழ்மனமே தாழ் திறவாய்!



மனம் என்றால் எண்ணங்களின் தொகுப்பு என்று பார்த்தோம். மனம்தான் புலன்களின் அரசன் என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா சொல்கிறார். மனம், காற்று போன்றது, அதனை நிறுத்திவைக்க இயலாது என்றும் சொல்லும் ஸ்ரீகிருஷ்ணரே, தொடர் பயிற்சியின் மூலம் மனதைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் சொல்கிறார். மனதை தன் இஷ்டத்துக்கு கட்டுப்படுத்தத் தெரிந்தவர்களுக்கு இந்த உலகில் வேறு எதுவும் தேவையிருக்காது, ஏனென்றால் அவர்கள் விரும்பிய அனைத்தும், காலடியில்தான் இருக்கும்.

ஆனால் மனதை கட்டுப்படுத்துவது அத்தனை எளிதல்ல என்பதற்கு சொல்லப்படும் குரங்கு கதை அனைவருக்கும் தெரிந்ததுதான். சிரஞ்சீவியாக வாழ்வதற்கு ஆசைப்பட்ட அரசன், அதற்கான மருந்து செய்து தரும்படி அரண்மனை வைத்தியருக்கு ஆணையிட்டான். அப்படி ஒரு மருந்து இல்லை என்றே அனைவரும் நினைத்தார்கள். ஆனால் அவரோ, 'நிச்சயம் மருந்து கொண்டுவருகிறேன்' என்று சொன்னார். சொன்னபடியே அடுத்தநாள் மருந்து கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ஒரே ஒரு நிபந்தனை மட்டும் விதித்தார். அதாவது, 'மருந்து குடிக்கும்போது குரங்கை மட்டும் எக்காரணம்கொண்டும் நினைக்கக்கூடாது. குரங்கை நினைத்துவிட்டால் மருந்து வேலை செய்யாது' என்று சொல்லி சிரஞ்சீவி மருந்தை அரசனுக்குக் கொடுத்தார்.

### மருந்தே குரங்கு

இதுவரை எதற்காகவும், எப்போதும் குரங்கை நினைத்ததே இல்லை என்பதால், மருந்து குடிக்கும்போது மட்டும் எதற்காக நினைக்கப்போகிறேன் என்று அசட்டையாக மருந்தை வாங்கிப்போனான் அரசன். ஆனால் ஒவ்வொரு முறை மருந்து சாப்பிட முயற்சித்த நேரம் எல்லாம் குரங்கு மனதில் நுழைந்து பல்லைக் காட்டியது. அவனுடைய மனக்கண்ணின் முன்பு ஏராளமான குரங்குகள் சேட்டை செய்யத் தொடங்கின. குரங்குகளின் தொந்தரவு தாங்காமல் மருந்து பாட்டிலை தூக்கி எறிந்தபிறகுதான், அரசன் மனதில் இருந்து குரங்கு இறங்கிப்போனது. ஏதாவது ஒன்றை நினைக்கக்கூடாது என்று வைராக்கியம் எடுத்தால், அடிக்கடி அதுவே நினைவுக்கு வருவதும், ஞாபகமாக வைக்கவேண்டும் என்று ஒரு பொருளை பத்திரப்படுத்தினால், அந்த இடம் மறந்து போவதும் மனதின் சித்து விளையாட்டுதான். உண்மையில் ஒவ்வொரு நபரின் மனசுக்குள்ளும் ஆயிரமாயிரம் குரங்குகள் உலாவுகின்றன. அவற்றை விரட்டுவதில்தான் ஒருவரின் வெற்றி இருக்கிறது.

மனதை பற்றி தெளிவாக அறியும் முன்பு, உடல் பெரிதா... மனம் பெரிதா என்ற கேள்விக்கு விடை தெரிந்திருக்க வேண்டும்.

உடல் இன்பத்தை விரும்பக்கூடியது. மனம் வெற்றியை விரும்பக்கூடியது. மனிதனுக்கு இரண்டும் தேவை என்றாலும் எதனை எது ஆதிக்கம் செய்கிறது என்பதில்தான் ஒருவரது எதிர்காலம் இருக்கிறது. வெற்றிக்கு உடல் ஒருபோதும் துணை புரிவதில்லை என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

### மிஸ்டர் ஒல்லிக்குச்சி

உசேன் போல்ட்டைவிட அதிக உடல் திடத்துடன் ஏராளமான நபர்கள் உலகில் இருக்கிறார்கள். ஆனால் ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற முடியும் என்ற வைராக்கியம் உசேனுக்குத்தான் இருந்தது. அந்த எண்ணம் உடல் தகுதியால் மட்டும் ஒருவருக்கு ஏற்படுவதில்லை.

ஆஜானுபாகுவான உடல் படைத்த சிலர் கோழையாகவும், முருங்கை குச்சு போன்று ஒல்லியர்கள் ரவுடியாகவும் இருப்பதை பார்த்திருக்கலாம். இதற்குக் காரணமும் மனம்தான். மனதில் வீரம் இருப்பதாக நினைப்பவன் தைரியசாலியாக இருக்கிறான். சாதாரண காய்ச்சலுக்கே சிலர் கலகலத்துப்போக, இதயத்தில் பிரச்னை இருக்கும் நிலையிலும் சிலர் கர்லாக்கட்டையாகத் திடமுடன் திரிவார்கள். மஃப்டியில் கோழையாக இருப்பவன், போலீஸ் உடை போட்டதும் வீரனாக மாறுவது உண்டு. இதுவும் மனதின் லீலைதான்.

இதுபோன்று ஏராளமான உதாரணங்களில் இருந்து, உடலைவிட மனதை முக்கியமாக கருதவேண்டும் என்ற முடிவுக்கு உறுதியாக வரமுடியும். உடலைவிட மனம் பெரிது என்பதை ஒப்புக்கொள்வதால் வாழ்க்கை மாறிவிடுமா என்று கேட்டால் இல்லைதான். ஆனால் உடல் சொல்வதைக் கேட்காமல் மனம் சொல்வதைத்தான் கேட்க வேண்டும் என்ற எண்ணம் விதையாகத் தங்கும். இந்த விதை பெரிய மரமாக வளர்ந்துவிட்டால் வெற்றிக்கு பஞ்சமிருக்காது, கவலைக்கு இடம் இருக்காது.

மூக்குமுட்ட உணவு சாப்பிடுவதும், நன்றாகத் தூங்குவதும் உடலுக்கு மிகவும் பிரியமானவை. அவசரமாக நடந்து செல்லும்போது, ரோட்டுக் கடையில் இருந்து பஜ்ஜி வாசனை மூக்கைத் துளைத்தவுடன், உடனே இரண்டு வாங்கிக்கொடு என்று உடல் கெஞ்சிக் கேட்கும். உடலை மதிப்பவர் என்றால் உடனடியாக உடலின் ஆசையை நிறைவேற்றி வைப்பார். ஆனால் மனதை மதிப்பவர் நிறையவே யோசனை செய்வார். ரோட்டுக் கடை பஜ்ஜி சுகாதாரமாக இருக்குமா,

**அத்தியாயம்-2**
**குரங்குகளின் கூடாரம்**


www.gyanaguru.com

## அறிவு வேறு... மனம் வேறு!

அறிவுதான் மனம் என்று பலர் நம்புகிறார்கள். இதுவரை கற்றதும் அறிந்ததும் அறிவு என்று குறிப்பிடப்படுகிறது. பாலில் இருந்து தயிர், நெய், பால்கோவா போன்றவை செய்யமுடியும் என்பதை தெரிந்திருப்பது அறிவு. இந்த அறிவைக் கொண்டு மட்டும் பால்கோவா செய்துவிட முடியாது. இந்த அறிவை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் பயிற்சி எடுத்துக்கொள்வதற்கும் மனம் தேவைப்படுகிறது. அறிவுடன் மனம் சேரும்போது காரியங்கள் நிறைவேறுகிறது. அதனால் மனதின் ஒரு பகுதியே அறிவு தவிர, மனமே அறிவு அல்ல.

வயிறு பசிக்காத நேரத்தில் பஜ்ஜி தேவையா, தண்டச்செலவு செய்து உடலை கெடுக்க வேண்டுமா என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி எழுப்புவார். அதனால் பஜ்ஜி கடையைத் தீண்டாமல் சென்றுவிட முடியும்.

இப்படி உடல் ஆரோக்கியம் காக்கவும், உள்ளம் அமைதியடையவும், நினைத்த படிப்பை முடிக்கவும், பிடித்த வேலை கிடைக்கவும் மனமே உதவி செய்யும் வாகனமாக இருக்கிறது. ஆம், மனம் எனும் வாகனத்தில் ஏறி, அதனை கட்டியாகப் பிடித்துக்கொண்டால் ஆசைப்பட்ட அனைத்தையும் அடைந்துவிட முடியும். மனதின் சக்தியை அறிவதற்கு நடத்தப்பட்ட சோதனையை பார்க்கலாம்..

### நோய்க்குக் காரணம் மனம்

ஆஸ்திரேலியாவில் மனம் குறித்த ஆய்வுக்கு மூன்று நபர்கள் வரவழைக்கப்பட்டார்கள். மூவரது உடலிலும் சத்து ஊசிகள் தினமும் குத்தப்பட்டன. முதல் நபரிடம், உடலில் புற்றுநோய் கிருமிகள் ஏற்றப்படுவதாக பொய் சொல்லப்பட்டது. இரண்டாம் நபரிடம் சத்து ஊசி போடப்படுகிறது என்ற உண்மை சொல்லப்பட்டது. மூன்றாவது நபரிடம் என்ன ஊசி போடப்படுகிறது என்ற தகவல் மறைக்கப்பட்டது. வாரம் இரண்டு நாட்கள் என்ற ரீதியில் ஆறு மாதங்கள் ஊசி போடுவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது.

இரண்டாவது மாதத்திலேயே முதல் நபர் உடல் தளர்ந்து விட்டது. தலைமுடி உதிர்கிறது, ஈறுகள், பற்கள் வலிக்கின்றன, விரும்பியதை சாப்பிட முடியவில்லை, தூக்கம் குறைந்துவிட்டது என்று ஏராளமான உடல் நலக் குறைகளை தெரிவிக்கத் தொடங் கினார். இரண்டாவது மாதத்திற்குள் கிட்டத்தட்ட 7 கிலோ எடை குறைந்துவிட்டார்.



இரண்டாவது நபர் படு ஆரோக்கியமாக இருந்தார். ஏற்கெனவே ஆரோக்கியமானவர் என்பதால், இப்போது அதிசுறுசுறுப்பாக மாறினார். இரண்டாவது மாதத்தில் கிட்டத்தட்ட 3 கிலோ எடை அதிகரித்தது.

மூன்றாவது நபர் இனம் தெரியாத அச்சத்தில் இருந்தார். ஏதோ நடக்கிறது ஆனால் என்னவென்று புரியவில்லை என்ற சந்தேகம் அவர் மனதை கிளறிக் கொண்டே இருந்தது. இவருக்கு கிட்டத்தட்ட 2 கிலோ வரை எடை குறைந்துவிட்டது. மூன்றாவது மாதம் பரிசோதனை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, மூவரிடமும் உண்மை சொல்லப்பட்டது.

முதல் நபர் உண்மையை புரிந்து கொள்ளவே மிகவும் சிரமப்பட்டார். உண்மையிலே என் உடலில் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன என்று வாதாடினார். மூன்றாவது நபர் மிகத் தெளிவாக, ‘எனக்கு உடலில் பெரிய பிரச்னைகள் எதுவும் ஏற்படவில்லை, ஆனால் ஏற்படக்கூடும் என்ற அச்சம் மட்டும் இருந்தது. அதனால் சில நோய்கள் வரலாம் என்று காத்திருந்தேன்‘ என்று சொன்னார். இந்த பரிசோதனை மூலம் மனதை தொந்தரவு செய்வதன் மூலம் ஒருவனை நோயாளியாக மாற்ற முடியும் என்ற உண்மை உறுதி செய்யப்பட்டது.

இதையொட்டி நமது நாட்டுப்புறக் கதை ஒன்று இருக்கிறது. ஊரில் மிகவும் அழிச்சாட்டியம் செய்துகொண்டிருந்த போக்கிரி ஒருவனை எதிர்க்க வழி இல்லாமல் மக்கள் தடுமாறினார்கள். அப்போது வந்த சாமியார் ஐந்து பேரை மட்டும் அழைத்து அதற்கான உபாயத்தைச் சொன்னார். அதன்படி அடுத்த நாள் அந்த போக்கிரியை ஒருவர் பின் ஒருவராக ஐவரும் சந்தித்தார்கள். ஏன் உடல் மெலிந்து விட்டது, உடலில் என்ன நோய், ஒரே நாளில் பரிதாபமாக மாறிவிட்டீர்களே என்று மனதை வலுவிழக்கச் செய்யும் விஷயங்களை ஒருவர் தொடர்ந்து மற்றவர் பேசினார்கள். இதனையடுத்து அவன் வலுவிழந்து படுக்கையில் விழுந்தான்.

அதனால் மனதை தொந்தரவு செய்தால் தீய விளைவு ஏற்படுகிறது என்றால், மனதை ஆராதனை செய்தால் நல்ல விளைவு ஏற்படுவது நிச்சயம்தானே...?


**– மனக்கண் திறக்கட்டும்**

### மந்திரச்சொல்

பிறரிடம் இருந்து எடுத்தாலும் சரி, பிறருக்குக் கொடுத்தாலும் சரி... மகிழ்ச்சி மட்டும்தான் அள்ள அள்ளக் குறையாதது.








### மரங்கள் வீழ்வதில்லை

மரமொன்று
வீழ்ந்து கிடப்பதை
காணும்போது
கலங்கிநிற்பதில்லை காடு!
மக்கச்செய்து உரமாக்கி
இன்னும் பல மரங்களை
உருவாக்கி செழிக்கிறது காடு
இயற்கையின் நியதியால்...
மனிதனைப்போல்
வீழ்ந்தே விடுவதில்லை..
மரங்களும்... காடுகளும்!

**– மலைநாடன் ஆசாத்**

# கடவுளை சந்திக்க எளிய வழி



திருப்பரங்குன்றம் மலையில் ஏறிக்கொண்டிருந்த ஞானகுருவை ஒரு குரல் அழைத்தது.

“சாமி என்னோட கொஞ்சநேரம் பேசிட்டுப் போகணும்” என்று அன்புக்கட்டளை இடுவதுபோன்று அழைத்த நபரை எடை போட்டார் ஞானகுரு. நெற்றி நிறைய திருநீறு, தும்பைப் பூவாய் வெள்ளை வேட்டி... வெள்ளை சட்டை, முகத்தில் பிசினஸ்மேன் மிடுக்கு. ஞானகுருவுக்கும் ஓய்வு தேவைப்படவே, அருகில் சென்று அமர்ந்தார்.

”நீங்க ஒரு சாமியார்ன்னு தெரியுது... திருநீறுகூட பூசாம இருக்கீங்க. அதையும் துறந்துட்டீங்களா..?” குரலில் லேசான கிண்டல் எட்டிப் பார்த்தது.

“அது எதுக்கு?” என்று கேட்டார் ஞானகுரு அசட்டையுடன்.

”என்ன சாமி திருநீறு எதுக்குன்னு கேக்குறீங்க... அதோட மகிமை உங்களுக்குத் தெரியாமலா இருக்கும்?” என்றார். அப்படி அவர் சொன்ன தோரணையைக் கேட்டபொழுதே, திருநீறு பற்றி நிறையத் தகவல்கள் தெரிந்து வைத்திருப்பதும், அதை சொல்லத் துடிப்பதும் தெரிந்தது.

”சரி, திருநீறு பற்றி தெரிந்ததைச் சொல், கேட்டுக் கொள்கிறேன்...”

”எல்லா விபூதியும் சாம்பல் நிறத்தில் இருந்தாலும், அதில் சாந்திகம், பௌஷ்டிகம், காமதம் என்று மூன்று வகையான விபூதிகள் இருக்கிறது. இதனை நேரத்திற்கு ஏற்ப நெற்றியில் தினமும் தரித்து வந்தால், பிரம்மன் எழுதிய தலை எழுத்தையே மாற்றி விடலாம். ‘விபூதி இல்லாத நெற்றியைச் சுடு, சிவன் கோயில் இல்லாத ஊரைச் சுடு, சிவசிந்தனையில்லாத வித்தையைச் சுடு’ என்று பெரியோர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்” என்று கடகடவென பேசிய பிசினஸ்மேன் குரலில் கர்வம் தெரிந்தது. ”சாமி... திருநீறு பூசிக்கிட்டா நோய் நொடி இல்லாம, ஏன் மரணமே இல்லாமக் கூட வாழ முடியும்...”

”அப்படி என்றால் உனக்கு மரணம் இல்லை என்று சொல்ல வருகிறாயா?”

”அதெப்படி? வேதத்துல சொன்னபடி முறையா திருநீறு பூசுனாத்தான மரணத்தை வெல்ல முடியும்...” என்று பம்மினார்.

”ஓ... அப்படியானால் நீ வேதமுறைப்படி பூசவில்லையா..?” ஞானகுருவின் குத்தல் அவரை காயப்படுத்தி இருக்க வேண்டும்.

”எனக்குத் தெரிந்த வகையில் நான் சரியாகத்தான் பூசுகிறேன். நான் நிறைய ஆன்மிகப் புத்தகமெல்லாம் படிச்சிருக்கேன். எத்தனையோ பெரிய பெரிய சாமியார்களை வீட்டுக்கு அழைத்து வந்து சாப்பாடு போட்டி ருக்கேன், ஹோமம் பண்ணியிருக்கேன், எங்க ஊர்ல வந்து கேட்டுப் பாருங்க, என்னை பெரிய பக்திமான்னு பெருமையா சொல்வாங்க...” என்றார்.

”அப்படியா... கடவுள் மீது அத்தனை அன்பு வைத்திருக்கிறாயா..?”

www.gyanaguru.com
www.gyanaguru.com

”பின்னே... ஒரு நாள்கூட கோவிலுக்குப் போகாம இருக்கமாட்டேன். நல்லநாள் வந்தா எங்க வீடே தெய்வீகமா இருக்கும். நிறைய அன்னதானம் செய்றேன். அவன் அள்ளியள்ளிக் கொடுக்கிறான், நானும் ஏழைகளுக்கு நிறைய செய்றேன். எனக்கு ‘ஆன்மிகச் செம்மல்’னு ஒரு பட்டம்கூட கொடுத்திருக்காங்க சாமி...’’ என்று பெருமை பொங்கச் சொன்னார்.

”என்ன தொழில்?”

”கான்ட்ராக்டர் சாமி... ரோடு போடுறது, பாலம் கட்டுறதுன்னு எல்லா வேலையும் எடுத்துச் செய்றேன்” என்றார்.

’’தொழில்ல நிறைய தப்பு செய்ய வேண்டி இருக்குமே...”

”தொழில்ன்னா கொஞ்சம் முன்னப்பின்னதான் இருக்கும், அதைப் பார்த்தா முடியுமா சாமி? எல்லாம் அவன் இஷ்டப்படி நடக்குது சாமி. கடைசி வரைக்கும் இதேமாதிரி ஆண்டவன் கடாட்சம் இருந்தாப் போதும்” என்றார்.

’’கடவுள் மீது இத்தனை அன்பாக இருக்கிறீர்கள், கடவுளை நேரில் தரிசிக்க விருப்பமா?” என்று ஞானகுரு கேட்டதும், கண்கள் நூறு வாட்ஸ் பல்பு போல பிரகாசிக்க, “யாருக்குத்தான் ஆசை இருக்காது..?” என்று பரவசப்பட்டார்.

’’தரிசனம் தரும் இறைவனுக்குக் காணிக்கையாக எதைக் கொடுப்பீர்கள்?”

”என்ன சாமி இப்படிக் கேட்டுப்புட்டீங்க... இந்த சொத்து, சுகம் எல்லாம் அவன் கொடுத்ததுதானே, என்ன கேட்டாலும் கொடுப்பேன்” என்றார்.

“சரி.... நாளை அதிகாலை 4:30 மணிக்கு எழுந்து குளித்து சுத்தமாகி பூஜையறையில் அமர்ந்து கண்களை மூடி இறைவனை தியானம் செய். நானும் அந்த சமயத்தில் நிஷ்டையில்தான் இருப்பேன், அதனால் மந்திர உச்சாடனைகள் மூலம் நான் காணும் இறைவனை, நீயும் தரிசனம் செய்வதற்கு வழி செய்கிறேன். இறைவன் தரிசனம் கிடைக்கும் வரை பூஜையறையில் இருந்து வெளியே வருவதோ அல்லது கண்களைத் திறக்கவோ வேண்டாம்...” என்று ரகசிய குரலில் பேசினார் ஞானகுரு.

“சாமி... எத்தனை நேரம் கண்ணை மூடியே இருக்கணும், ஏன்னா...” என்று இழுத்தார்.

”ஓ.. நீ பெரிய பக்திமான். அதனால் நிறைய வேலைகள் இருக்கலாம். ஆனால் கடவுளுக்கு அப்படியெல்லாம் கிடையாது. அதனால் விரைவில் அதாவது நீ தியானத்தில் அமர்ந்த அரை மணி நேரத்திற்குள் இறை தரிசனத்திற்கு ஏற்பாடு செய்கிறேன் போதுமா..?” என்றார் ஞானகுரு.

அவர் முகம் சந்தோஷத்தில் டாலடித்தது. “சாமி... கடவுளை மட்டும் பார்த்துட்டேன்னா, உங்களுக்கு என்ன வேணும்னாலும் தர்றேன்” என்றார்.

’’எனக்கு எதுவும் வேண்டாம். ஆனால் உனது அதீத பக்தியைப் பார்த்தால் எனக்கே ஆனந்தமாக இருக்கிறது. அதனால், உன்னிடம் இறைவன் என்ன கேட்பார் என்பது இப்போதே தெரிந்து விட்டது...” என்றார் ஞானகுரு

”கடவுள் என்ன கேட்பார் சாமி...” என்று ஆவலுடன் கேட்டார்.

”கடவுளின் தாசனாக நீ இருப்பதைக் கண்டு ஆனந்தப்படுவார். மக்களுக்கு சேவை செய்கிறாய், நிறைய தர்மம் செய்கிறாய்.. அதனால் உன் மீது மிகுந்த அன்புகொண்டு, ‘இப்பொழுதே என்னுடன் வந்துவிடு’ என்று அழைத்துக் கொள்வார் என்று நினைக்கிறேன். அதனால் அவருடன் ஐக்கியமாவதற்கும் தயாராக இரு... யாருக்கும் எளிதில் கிடைக்காத அரிய வாய்ப்பு...” என்று கிசுகிசுப்பான குரலில் அவர் காதில் சொன்னேன்.

”கடவுளின் தாசனாக நீ இருப்பதைக் கண்டு ஆனந்தப்படுவார். மக்களுக்கு சேவை செய்கிறாய், நிறைய தர்மம் செய்கிறாய்.. அதனால் உன் மீது மிகுந்த அன்புகொண்டு, ‘இப்பொழுதே என்னுடன் வந்துவிடு’ என்று அழைத்துக் கொள்வார் என்று நினைக்கிறேன். அதனால் அவருடன் ஐக்கியமாவதற்கும் தயாராக இரு... யாருக்கும் எளிதில் கிடைக்காத அரிய வாய்ப்பு...” என்று கிசுகிசுப்பான குரலில் அவர் காதில் சொன்னேன்.

அவ்வளவுதான். அடுத்த கணம் அவர் முகம் அமாவாசை இரவானது.. பொறியில் சிக்கிய எலி போன்று திருட்டு விழி விழித்துக் கொண்டிருந்தவர், கொஞ்சநேரத்திற்குப் பின் “சாமி... இன்னும் நிறைய கடமை இருக்குதே... கொடுத்த கடன், எடுத்த கான்ட்ராக்ட் எல்லாத்தையும் விட்டுட்டு எப்படி சாமி... என் இரண்டாவது பொண்ணுக்கு கல்யாணம் வேற செய்யணும்...” என்று தடுமாறினார்.

”மரம் வைச்சவன் தண்ணீர் விட மறக்கமாட்டான். அதுவும் நீ கடவுளின் செல்லப் பிள்ளை. நீ செய்த புண்ணியங்கள் உங்கள் சந்ததியைக் காக்கும்...” என்றேன்.

கொஞ்சநேரம் யோசித்தவர், ‘’அப்படின்னா, இன்னும் நாலைஞ்சு வருஷம் கழிச்சு இந்த பூஜையை வச்சுக்கலாமா சாமி...’’ இறைஞ்சலும் பயமும் கலந்த குரலில் கேட்டதும், சட்டென சிரித்தார் ஞானகுரு.

”ஓ... கடவுள் மயிரைப் போன்று எதையாவது கேட்டதும் கொடுத்துவிடலாம் என்று நினைத்தாய். படைத்த கடவுளே கேட்டாலும் உயிரைத் தரமுடியாது... அப்படித்தானே?”

இப்படியொரு பட்டவர்த்தமான கேள்வியை எதிர்பார்க்கவில்லை என்பதால், அதிர்ச்சியடைந்து தடுமாறி, “கடமை மட்டும் இல்லேன்னா...” என்று உளறினார். சிரித்தபடி எழுந்து நடந்தார் ஞானகுரு.

www.gyanaguru.com






www.gyanaguru.com

# மரணம் என்பது முடிவல்ல...



**70** வயதிலும் கொய்யாக்காய் விற்று பிழைத்துவந்தாள் ராசாத்தி. அன்று ஏனோ காய்கள் விற்பனை ஆகாமல் தேங்கிக்கிடந்தன. மனமெல்லாம் வருத்தத்துடன் கொய்யாக் கூடையை கீழே இறக்கியவள், 'ஆண்டவனுக்கு கண்ணு அவிஞ்சே போச்சு... இந்த வயசில் என்னை பாடாய்படுத்துறான், ஒரேயடியா என்னை கூப்பிட்டுப் போகமாட்றானே...' என்று வாய்விட்டுப் புலம்பினாள்.

எமதர்மனுக்கு அவளைப் பார்க்க பரிதாபமாக இருக்கவே உடனே ஓடிவந்தான்.

'ராசாத்தி... வா எமலோகம் போகலாம். இனிமே நீ கொய்யாக்கா வித்து அவதிப்படவேண்டாம்...' என்றபடி கையைப் பிடிச்சான். அவ்வளவுதான், ராசாத்திக்கு மூக்குக்குமேல் கோபம் வந்தது.

'கூடையைத் தூக்கி தலையில வைக்க ஆளில்லைன்னு கூப்பிட்டா, நீ சாகச் கூப்பிடுறேன்'னு படக்கென்று தலையைத் திருப்பினாள். தலையை படக்கென்று திருப்பிய ராசாத்திக்கு நரம்பு எசகுபிசகாக சிக்கிக்கொள்ள, செத்தே போனாள்.

ராசாத்தி செத்துப்போனதுக்கு யாருமே அழவில்லை. இத்தனைக்கும் இரண்டு பெண் பிள்ளைகளையும் உள்ளூரில் கட்டிக்கொடுத்திருந்தாள். அவர்கள் பிள்ளை குட்டியுடன் வந்து அரட்டை அடித்தார்களே தவிர, அழவில்லை. கடைசி பையன் டவுனில் இருந்து வரட்டும் என்று ராசாத்தியை ஐஸ் பெட்டியில் வைத்து காத்துக்கிடந்தார்கள். தனியாகிடந்து சீரிழியறதைவிட செத்துப்போனது நல்லதுன்னு பேசிக்கிட்டாங்க.

அதே நாளில்தான் புண்ணியகோடியும் செத்துப்போனான். அவனுக்கு வயசு 41. திடீர் நெஞ்சுவலி என்று மருத்துவமனையில் சேர்த்தார்கள். கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் லட்சம் ரூபாய் செலவழித்தும் செத்தே

போனான். அவன் மனைவி, திருமணமாகாத மூத்த பெண், அடுத்தடுத்த இரண்டு பையன்கள் என குடும்பமே கதறி அழுதது. புண்ணியகோடியை தெரிந்தவர்களும் அறிந்தவர்களும் கண்ணீர் சிந்தினார்கள். "கடவுளுக்கு கண்ணே இல்லை, இதுவெல்லாம் போகவேண்டிய வயசா..." என்று பேசிக்கொண்டார்கள்.

இனி விஷயத்துக்குப் போகலாம்.

இரண்டு வீட்டில் மரணம் நிகழ்ந்திருக்கிறது. ராசாத்தியின் வீடு மரணத்தைக் கண்டு கொள்ளாமல் இருக்க, புண்ணியகோடி வீட்டில் மட்டும் அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். மனிதன் ஏன் எல்லா மரணங்களுக்கும் அழுவதில்லை?

தன்னைப் பாதிக்காத மரணத்தை மனிதன் கண்டுகொள்வதில்லை, இன்னும் சொல்லப் போனால் பிறர் மரணத்தை ரசிக்கிறான் என்பதுதான் நிஜம். விதவிதமான மரணம் குறித்து நாளிதழில் ஆர்வமாகப் படிக்கிறான், எந்தடி.வி-யில் நிறைய பிணம் காட்டுகிறார்கள், எதில் நிறைய ரத்தம் காட்டுகிறார்கள் என்று தேடித்தேடி ரசிக்கிறான். இந்த மரணங்களுக்கு எந்த மனிதனும் அழுவதில்லை, ஏனென்றால் அந்த மரணங்களால் அவனுக்கு நேரடி பாதிப்பு இல்லை.

ராசாத்தியால் இனி யாருக்கும் பயன் இல்லை என்பதாலே அவள் மரணத்தை, வாரிசுகள் கொஞ்சமும் கண்டுகொள்ள வில்லை, அழவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒரு சுமை ஒழிந்தது என்று சந்தோஷப்பட்டார்கள். பெற்ற தாய், தந்தை மரணம் அடைந்தாலும், அவர்களால் பயனில்லை என்றால் கண்டு கொள்ள மாட்டார்கள் என்பதுதான் நிஜம்..

ஆனால் புண்ணியகோடி நிலை அப்படியில்லை. மனைவிக்கு இளம் வயது. இனி தனியாக வாழவேண்டிய பயம் மிரட்டுகிறது. குடும்பச்செலவுக்கு பணம் தர ஆள் இல்லை என்று அழுகிறாள். படிப்புச்செலவு, எதிர்கால பயத்தால் பிள்ளைகள் கலங்கி அழுகிறார்கள். எங்கள் வாழ்வு இடியாப்ப சுழலில் சிக்கிக் கொண்டது, யாராவது ஆதரவு கொடுங்கள், காப்பாற்ற வாருங்கள் என்ற அழைப்புதான் அவர்களது அழுகையின் அடிநாதம்.

அப்படியென்றால் அக்கம்பக்கத்தினரும் உண்மையாக புண்ணியகோடிக்காக அழவில்லையா?

இல்லை என்பதுதான் உண்மை. அவனால் நேசிக்கப்பட்டவர்கள், அவனை நேசித்தவர்கள் அந்த அன்பு இனி கிடைக்காது என்ற வெறுமை யால் அழுதார்கள். இதுபோன்ற அற்பாயுள் மரணம் தங்களுக்கும் நேருமோ என்ற அச்சத்தில் அழுதார்கள்.

இப்படி சொல்வதால் மனைவி, மக்களின் உண்மையான பாசத்தை கொச்சைப்படுத்து வதாக ஆதங்கப்படுபவர்கள், இன்னும் சில தினங்களில் புண்ணியகோடி வீட்டு மனிதர்கள் வாழ்க்கையில் நடைபெறும் மாற்றங்களை



மனைவிக்கு இளம் வயது. இனி தனியாக வாழவேண்டிய பயம் மிரட்டுகிறது. குடும்பச்செலவுக்கு பணம் தர ஆள் இல்லை என்று அழுகிறாள். படிப்புச்செலவு, எதிர்கால பயத்தால் பிள்ளைகள் கலங்கி அழுகிறார்கள். எங்கள் வாழ்வு இடியாப்ப சுழலில் சிக்கிக் கொண்டது, யாராவது ஆதரவு கொடுங்கள், காப்பாற்ற வாருங்கள் என்ற அழைப்புதான் அவர்களது அழுகையின் அடிநாதம்.





உற்றுக் கவனித்தால் உண்மையைப் புரிந்துகொள்ளலாம்.

'என் புருஷனே போயிட்டார், இனிமே நான் எதுக்கு வாழணும்' என்று கண்கள் சிவக்க அழுதுகொண்டிருக்கும் இதே மனைவி, 'அவர் போனாலும் குழந்தைக்காக நான் வாழணுமே' என்று வசனம் பேசுவாள். இவள் செத்துப்போனாலும் பிள்ளைகள் எப்படியாவது வளரும் என்ற சூட்சுமம் புரிந்தாலும் செத்துப்போக மாட்டாள். ஏனென்றால் உயிர் வாழ்வதுதான் அத்தனை உயிரினங்களும் படைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்.

அப்பா செத்துட்டார், இனிமே எந்த வெட்டிச்செலவும் செய்யக்கூடாது என்று மனதார நினைக்கும் இதே மகள், அடுத்த மாதம், 'ஒரே ஒரு லிப்ஸ்டிக் வாங்க முடியாதா?' என்று அம்மாவுடன் சண்டைபோடுவாள். அதுதான் மனித இயல்பு. ஏதேனும் ஒரு புள்ளியில் அந்தக் குடும்பச்சக்கரம் சுழலத் தொடங்கிவிடும். ஏனென்றால் மரணம் முடிவாகவும், தீர்வாகவும் இருப்பதில்லை.

அதனால் மனிதன் மட்டுமல்ல, உலகில் உள்ள எந்த உயிரினமும் மரணத்தை விரும்புவது இல்லை. அதேபோல் தனக்கு இப்போதைக்கு மரணம் வராது என்றே ஒவ்வொருவரும் உறுதியுடன் நம்புகிறார்கள். உயிருக்கு ஆபத்து வந்தால் கடவுள் காப்பாற்றுவார் என்று நம்புகிறார்கள். ஆனால் எந்தக் கடவுளாலும் எந்த மதத்தாலும் மரணத்தை நிறுத்தமுடியாது. ஆம், இந்த உலகில் இதுவரை எந்த மனிதனும் சிரஞ்சீவியாக வாழ்ந்ததே இல்லை.

அப்படியென்றால் மரணம் என்றால் என்ன?

அது வாழ்க்கையின் முடிவல்ல, இன்னொரு ஆரம்பம். அதன் சூட்சுமம் மனித மூளைக்கு அப்பாற்பட்டது.. மரத்தின் இலை கீழேவிழுந்து மட்கியதும் மரத்துக்கு உரமாகி மீண்டும் இலையாக மாறுவதைப்போல், இந்த மரணத்துக்கும் வாழ்க்கை உண்டு. அதனால் மரணத்தைக் கண்டு அச்சம் வேண்டாம். எந்தஒரு திருப்பத்திலும், நிமிடத்திலும் மரணம் காத்திருக்கலாம் அதனால் மரணத்தை தவிர்க்கவோ, எதிர்க்கவோ முயற்சிக்க வேண்டாம். ஏனென்றால் மரணத்தைத் தடுக்க முடியாது. அதனால் மரணத்தை இயல்பாக எதிர்கொண்டு மனமார வரவேற்க வேண்டும்.

மரணத்தை எப்படி வரவேற்க முடியும்?

பூக்களை ரசிப்பதுபோல் மரணத்தை ரசிக்க வேண்டும் மணமும் உயிர்ப்பும் உள்ள வரை மலர்களைக் கொண்டாடுவதுண்டு. அதன்பிறகு குப்பைத்தொட்டிக்குப் போய்விடும். அப்படித்தான் உயிர் இருக்கும் வரை ரசித்து வாழவேண்டும். உயிருக்கு இடைஞ்சல் வரும்போது ஆனந்தமாக மரணிக்க முன்வர வேண்டும்.

கடமை முடிவடையும் வரை மரணத்தை தள்ளிப்போட ஆசைப்படலாம். அது, அலை நின்றதும் மீன் பிடிப்பதற்கு சமம். தனி மனித கடமைக்கும் மரணத்துக்கும் தொடர்பு கிடையாது. ஒருவர் இல்லையென்றால் இந்த உலகில் எதுவும் நிற்பதில்லை. ஏதாவது நடக்கும். அதனால் வீட்டுக்கு வரும் உயர் அதிகாரி அல்லது பிடித்தமான நண்பர் போன்று மரணத்தை வரவேற்கும் மனநிலை வேண்டும். தெருவில் விளையாடும் குழந்தை, தூரத்தில் அம்மாவைப் பார்த்ததும் ஓடிவந்து ஆசையாக கட்டிப்பிடிக்குமே, அப்படி மரணத்தை தழுவிக்கொள்ள வேண்டும். மரணத்தை ரசிக்கும் மனநிலை வந்துவிட்டால், சகிப்புத்தன்மையும் ஆனந்தமும் மனதில் பொங்கும், தங்கும்.

மரணத்தை ரசிப்பது எப்படி?

இறைச்சிக் கடைகளில் கோழிகளை ஒரே இடத்தில் அடைத்திருப்பார்கள். அந்தக் கோழிகளின் கண் எதிரில்தான் பிறகோழிகள் வெட்டப்படும். அதைக்கண்டு மற்ற கோழிகள் கத்தி, கூப்பாடு போவதில்லை. மரணத்தை வேடிக்கை பார்க்கும். வெட்டப்பட்ட கோழியின் உடல் துண்டு வீசப்பட்டால், கொஞ்சமும் யோசிக்காமல் உணவாக கொத்தித் தின்னும். மரணம் வரும்வரையிலும் வாழ்க்கையை வேடிக்கை பார்க்கும் கோழியைப்போல் நீயும் வாழு. அப்போதுதான் வாழ்க்கையை ரசிக்க முடியும். ஆனந்தமாக வாழ ஆசைப்படும் ஒவ்வொரு நபரும் முதலில் மரணத்தை ரசிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்னமும் மரணம் குறித்து பேசுவதற்கு ஆயிரத்தெட்டு விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் நிதானமாக பின்னர் அலசலாம். நமக்குத்தான் மரணம் கிடையாதே.



# கடவுளை கண்டுபிடிப்பது சுலபம்!

இளம் ரத்தம் சூடானது என்பார்கள். அப்படித்தான் இளைஞன் ஒருவன் வேகவேகமாக வந்து ஞானகுருவிடம் பேசினான்.

‘‘நான் கடவுளை பார்த்தேயாக வேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டும், எப்படி செய்யவேண்டும் என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லுங்கள்...’’ என்று கேட்டான்.

புன்னகைத்த ஞானகுரு, ‘‘கடவுளை கண்டுபிடிப்பது சுலபம்தான். உனக்கு வழிகாட்டுவதற்கு ஒரு நாட்டுப்புறக் கதை சொல்கிறேன். அதன்பிறகு நீயே அவரை கண்டுபிடித்துவிடலாம்’’ என்றார்.

‘‘சீக்கிரம் சொல்லுங்கள்’’ என்று அவசரப்பட்டான்.

‘‘கடவுள் இந்த உலகில் செடி, கொடிகளையும் பறவை, விலங்குகளையும் படைத்து முடித்தார். அதுவரை அவரை எந்த உயிரினமும் தொந்தரவு செய்யவில்லை. அதனதன் வாழ்க்கையை வாழ்ந்துவந்தன.

அதன்பிறகு மனிதனைப் படைத்தார். அதன்பிறகுதான் அவருக்கு தினமும் ஏகப்பட்ட கட்டளைகள், வேண்டுகோள்கள், மிரட்டல்கள் வந்தன. ஏனென்றால் அப்போது எல்லோராலும் கடவுளைக் காண முடிந்தது.

’எனக்கு பாதுகாப்பான வீடு வேண்டும், எனக்கு இப்போது மழை வேண்டும், இரவிலும் வெளிச்சம் வேண்டும், எனக்கு மனைவி வேண்டும், எனக்கு நல்ல உணவு வேண்டும், ஆரோக்கியம் வேண்டும், எனது சகோதரன் மதிப்பதில்லை, அவனை கொல்வதற்கு சக்தி வேண்டும்’ என்று ஆளுக்கு ஒரு கோரிக்கை வைத்துக்கொண்டே இருந்தார்கள்.

தினமும் முரண்பட்ட கோரிக்கைகள் வருவதை பார்த்த கடவுளுக்கு பயங்கர டென்ஷன். ஏன் இந்த மனிதர்களை படைத்தேன் என்று நொந்துகொண்டார். மனிதர்கள் பார்வையில் படாமல் எங்கேனும் ஒளிந்துகொள்ள ஆசைப்பட்டார்.

ஆகாயத்தில் அல்லது இமயமலை உச்சியில் போய் உட்கார்ந்துகொள்ள நினைத்தார். ஆனால், அவரது ஞானதிருஷ்டியில் எதிர்காலத்தில் மனிதன் அங்கெல்லாம் வருவது தெரிந்துபோனது. அதனால், மிகவும் யோசித்தவருக்கு பளீச்சென ஓர் உண்மை புலப்பட்டது. அந்த இடத்தில் ஒளிந்துகொண்டால், ஒரு மனிதனும் தேடி வரமாட்டான் என்பது புரிந்துவிட்டது. அதனால், அங்கே போய் ஒளிந்துகொண்டார்...’’

‘‘அது எந்த இடம்’’ ஆர்வமாகக் கேட்டான் இளைஞன்.

‘‘நீ கொஞ்சம் யோசித்தால் அந்த இடத்தை கண்டுபிடிக்க முடியும்...’’ என்றார் ஞானகுரு. அவசர புத்தியில் இருந்த இளைஞனுக்கு சிந்தனையே போகவில்லை.

‘‘நீங்களே சொல்லிவிடுங்கள்’’ என்றான்.

‘‘மனிதர்களின் மனதுக்குள் சென்று மறைந்து கொண்டார். ஏனென்றால், மனிதன் மனதைத்தான் கண்டுகொள்வதே இல்லை. நீ அங்கே தேடிப் பார். நிச்சயம் கடவுள் இருப்பார்’’ என்றார் ஞானகுரு.

‘‘மனதுக்குள் எப்படி கடவுளைத் தேடுவது..?’’

‘‘நீ யார், எதற்காக இந்த பூமிக்கு வந்திருக்கிறாய் என்பதை அறிந்துகொள்ள முதலில் முயற்சி செய். அந்த முயற்சி உன்னை கடவுளிடம் கொண்டுபோய் சேர்த்துவிடும்’’

‘‘அப்படியென்றால் நீங்கள் கடவுளை பார்த்துவிட்டீர்களா..?’’

’’பார்த்தேன் என்றாலும் இல்லையென்றாலும் மீண்டும் கேள்விகள் கேட்பாய். கேள்விகளை நிறுத்து... உன்னையே நீ அறிந்துகொள்’’ என்று முடித்தார் ஞானகுரு.



# மயக்கமா... கலக்கமா?

பிறப்பும் இறப்பும் மனிதனின் கையில் இல்லை. இடையில் வாழும் வாழ்க்கை மட்டுமே அவனுடையது. அதுவும் ஒரு வட்டம்தான். இன்பம், துன்பம், ஏமாற்றம், நிம்மதி, ஏமாற்றம், துரோகம், வெற்றி, தோல்வி போன்ற எல்லாமே இருக்கத்தான் செய்யும். கைக்கு கிட்டியது வாய்க்கு கிட்டாமல் போகலாம்.

இன்னும் சொல்லப்போனால், இன்பமும் துன்பமும் மாறி மாறி தோன்றிக்கொண்டே இருக்கும். ஆனால், இன்பத்தின் சுவடுகளை அந்த கணத்திலேயே மறந்துவிடும் மனிதன், துன்பத்தில் மட்டும் ஆழ்ந்து கிடக்கிறான். எனக்கு மட்டும் எப்போதும் துன்பம், என்னைத்தவிர யாருக்கும் இத்தனை பெரிய துன்பம் இல்லை என்று வருந்திக்கொண்டே இருக்கிறான்.

வேதங்களும், புராணங்களும், இதிகாசங்களும், மகான்களும் துன்பத்தை வெல்லும் வழிகளை சொல்லியிருக்கிறார்கள். அந்த போதனைகளை தன்னுடைய ஒரு பாட்டில் பிழிந்துகொடுத்து, அழியாப்புகழ் பெற்றிருக்கிறார் கவிஞர் கண்ணதாசன். ஆம், துன்பத்தில் இருப்பவர்களுக்கு உடனடி நிவாரணம் தரக்கூடிய ஒரு பாடலை படைத்திருக்கிறார்.

இதுதான், சுமைதாங்கி' படத்தில் இடம்பெற்ற கண்ணதாசனின் பாடல்.

## மந்திரச்சொல்

பிறரிடம்
இருந்து எடுத்தாலும்
சரி, பிறருக்குக் கொடுத்
தாலும் சரி... மகிழ்ச்சி
மட்டும்தான் அள்ள
அள்ளக் குறையாதது.

மயக்கமா கலக்கமா
மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல்தோறும் வேதனை இருக்கும்

வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவது இல்லை

எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்.

மயக்கமா கலக்கமா
மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா

ஏழை மனதை மாளிகை ஆக்கி
இரவும் பகலும் காவியம் பாடு

நாளை பொழுதை இறைவனுக்கு அளித்து
நடக்கும் வாழ்வில் அமைதியை தேடு

உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்து பார்த்து நிம்மதி நாடு

இந்த பாடல் என்ன சொல்கிறது என்று பாருங்கள். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் உச்சகட்ட சோதனை, துன்பம், விரக்தி வரவே செய்யும். வறுமை, இயலாமை, பழி சொல், துரோகம், எதிர்பாராத சோகம், பிரிவு, என ஏதாவது ஒரு ரூபத்தில் துன்பம் வந்து சேரும். அதுபோன்ற நேரத்தில் மயக்கமும், குழப்பமும் வரத்தான் செய்யும் என்கிறார்.

அதாவது, வாழ்க்கை என்றாலே ஆயிரம் பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். இது ஏதோ ஒரு மனிதனுக்கு மட்டுமல்ல, அத்தனை மனிதனுக்கும் உள்ள இயல்புதான் என்கிறார். அதேநேரம், அப்படி வந்த துன்பத்தை எண்ணி கலங்கிக்கொண்டே இருப்பதால் எதுவும் நேர்வதில்லை, நேரவும் செய்யாது என்று அழுத்திச் சொல்கிறார்.

### அப்படி என்றால் என்ன செய்யவேண்டும்?

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்கிறார். இன்பம் வரும்போது ஏற்றுக்கொள்வது போலவே, துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் இதயம் இருக்கவேண்டும் என்கிறார்.

### அதெப்படி தாங்கிக்கொள்ள முடியும்?

கற்பனை செய். உன்னிடம் எது இல்லையோ அது இருப்பது போல் கற்பனை செய். ஏழை என்றால் மாளிகையை மனதுக்குள் நினை. இரவும் பகலும் உன்னால் மேம்பட்ட நிலையை அடையமுடியும் என்று நம்பிக்கை கொள்.



### அப்படி கற்பனை செய்தால் மட்டும் போதுமா?

நாளை என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. அதனால், நாளை இறைவன் நல்ல வழியைக் காட்டுவான் என்று அவன் மீது பாரத்தைப் போட்டு அமைதி கொள் என்கிறார்.

### இறைவன் மீது பாரத்தை போட்டால் சரியாகிவிடுமா..?

ஆகாது என்பதுதான் உண்மை. அதற்காகத் தான் முத்தாய்ப்பாக ஒன்று சொல்கிறார். உன்னைவிட கீழான நிலையில் கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களை பார்த்து உன் மனதை தேற்றிக்கொள் என்கிறார். நீ பண்டிகைக்கு புது ஆடை வாங்க முடியவில்லையே என்று கவலைப்படுகிறாய் என்றால், பண்டிகை தினத்திலும் சாப்பிட முடியாத ஏழைகளை நினைத்துப் பார் என்கிறார். இந்த ஒப்பீடு உன்னை மேம்பட்டவனாக மாற்றிவிடும். உன்னைவிட கஷ்டப்படும் மனிதர்களே நன்றாக வாழும்போது, நீ மட்டும் குழப்பத்துடன் வாழலாமா.? அவர்களை பார்த்து நிம்மதி அடைந்துகொள் என்கிறார்.

எப்பேர்ப்பட்ட சிந்தனை.





www.gyanaguru.com

# நோயையும் வலியையும் தாங்கிக்கொள்ள முடியுமா..?



தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும் என்பார்கள். ஏனென்றால் ஒருவர் படும் வேதனையை மற்றவர்களால் எப்போதும் முழுமையாக உணரமுடியாது. யார் வந்து ஆறுதல் சொல்வதாலும் வலி நின்றுவிடுவதில்லை. அதனால்தான் வலியின் கொடுமை தாங்கமுடியாமல் தினமும் எத்தனையோ பேர் தற்கொலை செய்கிறார்கள்.

நோயினால் பாதிக்கப்படும் ஒவ்வொரு நபரும், இந்த உலகத்திலேயே தனக்கு மட்டும்தான் இப்படி கொடுமையாக வலிக்கிறது என்று எண்ணுகிறார்கள். நோயினால் வேதனை அனுபவிக்கும்போது, தங்கமுடியாமல் வலிக்கும்போது என்ன செய்யவேண்டும் என்பது பெரும்பாலான மனிதர்களுக்குத் தெரிவதில்லை, ஏன் மருத்துவர்களுக்கும் தெரிவதில்லை. அதனால்தான் வலி, வேதனையை அனுபவிப்பவன் தப்பும் தவறுமாக முடிவு எடுக்கிறான்.

இந்த நேரத்தில்தான் நாத்திகன் ஆத்திகனாகிறான், ஆத்திகன் நாத்திகனாகிறான். இதனால் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடப் போவதில்லை என்றாலும் மாறுகிறான். இன்பமும் துன்பமும், வெற்றியும் தோல்வியும், ஏற்றமும் இறக்கமும் கொண்டதுதான் வாழ்க்கை என்பதை வசதியாக மறந்துவிடுவான். இந்த வேதனைக்குக் காரணம், ஒருவேளை கடவுள் நிந்தனையாக இருக்குமோ என்று நாத்திகன் அச்சம் கொள்வான். கடவுள் இருந்திருந்தால் தன்னை இந்த வலியில் இருந்து காப்பாற்றியிருப்பாரே என்று ஆத்திகன் சந்தேகம் கொள்வான். இப்படி மாறியவன்தான் செல்வேந்திரன்.

செல்வேந்திரனின் அப்பா திராவிடர் கழகத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தவர். அதனால் செல்வேந்திரனும் நாத்திகனாகவே வளர்ந்தான். படித்துமுடித்து நல்ல வேலை கிடைத்ததும் பூர்ணிமாவை திருமணம் செய்துகொண்டான். இருவரும் ஆதர்ச தம்பதியாக வாழ்ந்தார்கள். ஆனால் திருமணம் முடித்து ஐந்து ஆண்டுகள் கடந்தபிறகும் குழந்தை இல்லை. அவன் மனைவி பூர்ணிமாவுக்கு கடவுள் பக்தி அதிகம். அவளை தடுக்கவில்லை செல்வேந்திரன். அதனால் அவள் போகாத கோயில் இல்லை, வேண்டாத தெய்வம் இல்லை.

குழந்தைக்காக இருவரும் சேர்ந்து நகரில் பிரசித்திபெற்ற மருத்துவரை சந்தித்தார்கள். கிட்டத்தட்ட ஒரு வருடம் சிகிச்சை எடுத்தபிறகும் குழந்தை பிறக்கவில்லை. ஒரு ஜோசியனை பார்த்துவிட்டு வந்தாள் பூர்ணிமா. நீங்கள் கடவுளை மதிக்காமல் இருப்பதால்தான் நமக்கு குழந்தை பிறக்கவில்லை என்று ஆத்திரத்தோடு சொன்னாள். நான் கடவுள் மறுப்பாளன் என்று தெரிந்துதானே திருமணம் முடித்தாய் என்று சண்டை போட்டான். அதே நேரத்தில் செல்வேந்திரனின் ஆண்மையை சிலர் கிண்டல் செய்து பேசத்தொடங்கினார்கள். இது செல்வேந்திரனுக்கு தாங்கமுடியாத அவமானத்தையும், வேதனையையும் கொடுத்தது. ரோட்டில் யார் தன்னை பார்த்து சிரித்தாலும், தன்னுடைய ஆண்மையை கேலி செய்வதாகவே நினைத்தான். அதனால் நண்பர்களை பார்த்து பேசுவதை தவிர்த்தான். ஆனால் அவன் மனதுக்குள் முதன்முதலாக சந்தேகம் எழுந்தது. இரண்டு பேருக்குமே உடலில் எந்தக் குறையும் இல்லை என்றாலும் குழந்தை பிறக்கவில்லை என்றால் தெய்வகுற்றம் காரணமாக இருக்குமோ என்று எண்ணத் தொடங்கினான்.

அந்த நேரத்தில்தான் சிறு விபத்தில் சிக்கினான் செல்வேந்திரன். தலையில் அடிபட்டிருந்தும் வேறு பிரச்னைகள் எதுவும் ஏற்படவில்லை. காலில் மட்டும் ஆழமான காயம் ஏற்பட்டது. என்னுடைய தாலி பாக்கியத்தால்தான் நீங்கள் பிழைத்திர்கள் என்று சொன்னாள் பூர்ணிமா. உடல்நிலை தேறவேண்டும் என்பதற்காக செல்வேந்திரன் உடம்பில் திருநீறு பூசிவிட்டாள். வேதனையை மீறி அதனை மறுக்கமுடியாமல் ஏற்றுக்கொண்டான் செல்வேந்திரன்.

எழுந்து நடக்கமுடியாதபடி, செல்வேந்திரனுக்கு கால் கடுமையான வலியைக் கொடுத்தது. நான் யாருக்கும் எந்த துன்பமும் செய்யவில்லையே, எனக்கு ஏன் இப்படி நடந்தது என்று கேள்விகேட்கத் தொடங்கினான். கடவுளை சின்ன வயதில் இருந்தே திட்டியதற்கான வினை என்று பூர்ணிமா சொன்னதை யோசிக்கத் தொடங்கினான். அவன் கடவுள் மீது கொஞ்சமாக நம்பிக்கை வைத்த நேரத்தில்தான் அந்த திருப்பம் நிகழ்ந்தது. ஆம், மருத்துவ சிகிச்சையாலோ அல்லது கடவுள் கிருபையாலோ பூர்ணிமா கர்ப்பமானாள். அதுவரை அறைகுறை மனதுடன் கடவுள் நம்பிக்கையில் இருந்த செல்வேந்திரன், முழுபக்தனாக மாறியே விட்டான். வலி, வேதனை, அவமானத்தில் இருந்து தப்புவதற்கு ஆத்திக அவதாரத்தை எடுத்துவிட்டான் செல்வேந்திரன்.

**பூர்ணிமாவின் பக்திக்காக உண்மையிலே கடவுள்தான் செல்வேந்திரனை ஆன்மிக பாதையில் திருப்பினார் என்று இந்த சம்பவத்தை ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது?**

மனிதனின் மூளையால் என்றுமே அளவிட முடியாத பிரமாண்டமான பிரபஞ்சத்தை படைத்தவர் கடவுள் என்றால், மனிதனால் உருவாக்கவே முடியாத உயிர்களை படைத்தது கடவுள் என்றால், அவர் நிச்சயம் செல்வேந்திரன் மனம் மாறுவதற்காக எந்த முட்டாள்தனமான காரியமும் செய்ய மாட்டார். கடவுள் நேரில் வந்து விளையாடும் அளவுக்கு எந்த மனிதனும் தகுதியானவன் அல்ல.

**கடவுளை கும்பிட்டால் வேதனை, வலி குறையும் என்பது நிஜம்தானே?**

கடவுளை கும்பிட்டால் வலி தீர்ந்துவிடும் என்பது உண்மை என்றால், நோயின் வேதனையை பக்தி மாற்றிவிடும் என்றால் இந்த உலகத்தில் மருத்துவமனைகளே தேவை இல்லை. அதனால் வலி, வேதனைகளை பொறுத்துக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் கற்கவேண்டும்.

**அது எப்படி வலியை ஏற்றுக்கொள்ள முடியும்?**

உலகத்திலேயே கொடுமையான வேதனை என்றால், அது பிரசவம் மட்டும்தான். சுயநினைவுடன் இருக்கும் மனிதனின் கையை முறிப்பதற்கு சமமான வேதனையை பிரசவத்தின்போது பெண் அனுபவிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அத்தனை கொடுமையான வேதனை என்பதால்தான் பிரசவ நேரத்தில் ஒவ்வொரு பெண்ணும் அலறுகிறாள், கத்துகிறாள், கூப்பாடு போடுகிறாள். ஆனால் குழந்தை பெற்றுக்கொண்டதும் அதுவரை அனுபவித்த அத்தனை வேதனைகளையும் மறந்துவிடுகிறாள். மீண்டும் அப்படியொரு வேதனையை தாங்கிக்கொண்டு குழந்தை பெற்றுக்கொள்ளவும் தயாராகிறாள். பிரசவம் மட்டுமின்றி, குழந்தை வயிற்றில் இருக்கும் ஒன்பது மாதங்களும் வேதனை தரும் சுமையுடனே வாழ்கிறாள். குழந்தையை சுகமான சுமையாக நினைப்பதால், வலியை விரும்பி ஏற்றுக் கொள்கிறாள் பெண். அப்படித்தான் நோயையும் வலியையும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மனதை பழக்க வேண்டும்.

> சிறு விபத்தில் சிக்கினான் செல்வேந்திரன். தலையில் அடிபட்டிருந்தும் வேறு பிரச்னைகள் எதுவும் ஏற்படவில்லை. காலில் மட்டும் ஆழமான காயம் ஏற்பட்டது. என்னுடைய தாலி பாக்கியத்தால்தான் நீங்கள் பிழைத்திர்கள் என்று சொன்னாள் பூர்ணிமா.





## மந்திரச்சொல்

ஒவ்வொரு
சூரிய உதயத்திலும்
நம்பிக்கையை பெறு,
ஒவ்வொரு சூரிய
அஸ்தமனத்திலும்
அமைதியை பெறு.

**பிரசவ வலிக்கு பிரதிபலனாக குழந்தை கிடைக்கிறது, ஆனால் நோயினால் உண்டாகும் வலி, வேதனையை ஏற்றுக்கொள்வதற்குப் பிரதிபலனாக என்ன கிடைக்கும்?**

உறுதியான மனம் கிடைக்கும். ஏனென்றால் நோய் என்பது உடலுக்குத்தான் கேடு விளைவிக்கிறது, மனதுக்கு அல்ல. விபத்து நடந்தால், அதனை விபத்தாகவே ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் செல்வேந்திரனுக்கு இருந்திருக்க வேண்டும். அவன் நம்பிக்கைவாதியாக இருந்திருந்தால், காலில் காயம் மட்டும் ஏற்பட்டுள்ளது, உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். அவன் என்ன இழந்தான் என்பது முக்கியமல்ல, என்ன மிச்சமிருக்கிறது என்பதுதான் முக்கியம். ஒரே ஒரு விபத்தில் கடவுளை நம்பியவன், நாளை மீண்டும் ஒரு விபத்து ஏற்பட்டால் கடவுள் மீது நம்பிக்கையை இழப்பான். கடைசிவரை உண்மையை கண்டறியவே மாட்டான்.

**விபத்தில் சிக்கி உடல் உறுப்புகளை இழக்கும்போது, எதிர்பாராத நோயினால் தாக்கப்பட்டு கொடுமையான வேதனையை அனுபவிக்கும்போது, அதனை எப்படித்தான் எதிர்கொள்ள வேண்டும்?**


முதலில் நடந்ததை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். ஏனென்றால் நடந்ததை இனி மாற்றவே முடியாது. நான் வண்டி எடுக்காமல் போயிருந்தால் விபத்து நடந்திருக்காது. உணவுக் கட்டுப்பாட்டுடன் இருந்திருந்தால் நோய் பாதித்திருக்காது என்று புலம்பித்தள்ளுவதால் எந்த லாபமும் இல்லை.

அடுத்த தீர்மானம்தான் மிகவும் முக்கியமானது. ஆம், இந்த வலி, வேதனை எல்லாமே விரைவில் தீர்ந்துவிடும். இத்தனை கொடுமையான வலி தொடர்ந்து இருக்காது என்று நம்பவேண்டும். அதனால் துன்பத்தை உண்டாக்கும் வலியை ஏற்றுக்கொண்டு அனுபவிக்க வேண்டும். எப்படி கர்ப்பிணி வலியை தாங்கிக்கொண்டு குழந்தை பெறுகிறாளோ, அப்படியே நாளைய ஆரோக்கியத்துக்காக இன்றைய வலியை தாங்கிக்கொள். நோயின் வேதனையும் வலியும் நீடித்தாலும் உனக்கு பழகிவிடும்.

**வலித்தால் அழக்கூடாதா?**

நன்றாக அழு. வேதனையை வெளிப்படுத்து. ஆனால் இது நிரந்தரமல்ல, இதோ முடிந்துவிடும் என்ற நம்பிக்கையை மட்டும் வளர்த்துக்கொள்... நீ குணமடைந்தால் நல்லது. செத்துப்போனால் அதைவிட நல்லது.


www.gyanaguru.com



# தெரியலையே...

எந்த ஒன்று பற்றியும் தெரிகிறதோ இல்லையோ, தெரிந்தது போன்று பேசுவதுதான் மனிதனின் புத்தி. தெரிய வில்லை என்ற உண்மையை ஒப்புக்கொள்வது தான் ஞானத்தின் பிறப்பிடம் என்பதை உணர்த்துகிறது, இந்த குட்டிக் கதை.

ஒரு ஊருல ஒரு முனிவர் இருந்தாரு. ஒரு நாளு அவரைப் பாக்க 4 பேரு வந்திருந்தாங்க. முனிவர்கிட்ட அந்த 4 பேரும், ”சாமி உலகத்த புரிஞ்சிக்கவே முடியலயே ,அதுக்கு என்ன வழி”ன்னு கேட்டாங்க. அதுக்கு அந்த முனிவர் ”தெரியல யேப்பா’ன்னு”ஒத்த வரில பதில் சொல்லிட்டாரு.

ஆனாலும் வந்தவங்க விடாம.”என்ன சாமி நீங்க எவ்ளோ பெரிய முனிவர் இதுகூடத் தெரியலைன்னு சொல்லுறிங்களே !” அப்படின்னு கேட்டாங்க.

அதுக்கு முனிவர் அவங்ககிட்ட “சரி இப்ப நான் உங்கள ஒரு புஷ்பக விமானத்துல அழைச்சிகிட்டுப் போவேன். போற வழியில ஒரு காட்சிய உங்களுக்குக் காட்டுறேன். அது பத்தி உங்களோட கருத்த நீங்க சொல்லணும், கருத்து தப்பா இருந்துச்சின்னா இந்த விமானம் உங்கள கீழ தள்ளிவிட்டுடும்” அப்டின்னாரு.

சரின்னு அந்த 4 பேரும் முனிவரோட சேந்து புஷ்பக விமானத்துல ஏறினாங்க.

கொஞ்ச தூரம் போன பிறகு ஒரு இடத்துல ஒரு புலி , குட்டிபோட்டுக்கிட்டு இருந்திச்சி. குட்டி போட்ட பிறகு தனக்கும் தன் குட்டிகளுக்கும் பசிக்கு இரை தேடி அந்தப் பக்கமா போனது. அந்தப் பக்கமா ஒரு மான், அதுவும் குட்டி போட்டுட்டு பசிக்கு தண்ணீர் குடிக்கிறதுக்கு வந்திச்சி.

மானப் பாத்த அந்தப் புலி சட்டுன்னு அது மேல பாஞ்சி அதைக் கொன்னு தானும் சாப்பிட்டு தன்னோட குட்டிகளுக்கும் குடுத்திச்சி. அத சாப்பிட்ட அந்தப் புலிக் குட்டிங்களுக்கு சந்தோசம்.

இந்தப் பக்கமா தன் அம்மாவ பறிகொடுத்த மான் குட்டிகளுக்கு வருத்தம். இந்தக் காட்சிய அவங்கிட்ட காட்டின முனிவர், ‘இதப் பத்தி உங்க கருத்து என்ன’ன்னு கேட்டாரு.,

அதுக்கு அந்த 4 பேருல ஒருத்தர் “இது ரொம்ப தப்பு. மான் குட்டிகளுக்கு இப்ப தாய் இல்லாம போச்சேன்னு சொன்னாரு”. உடனே அவர அந்த விமானம் கீழ தள்ளிவிட்டுடுச்சு.

அடுத்த ஆளப்பாத்து முனிவர் கேட்டாரு,”ஏம்பா உன் கருத்து என்னன்னு?

ஏற்கனவே ஒருத்தன் கீழ விழுந்தத பாத்த ஆளு இவன், ” இல்ல இது சரிதான், ஏன்னா புலிகளுக்கு இரையாகத்தானே மான்கள் இருக்குது அப்படின்னு சொன்னாரு. ஒடனே அவரையும் விமானம் கீழ தள்ளி விட்டுடுச்சு.,

இதையெல்லாம் பாத்துக்கிட்டு இருந்த அடுத்த ஆளு ரொம்ப உசாரா சொன்னான், “ இது தப்பும் இல்ல சரியும் இல்லன்னு”. ஒடனே அவனையும் அந்த விமானம் கீழ தள்ளிடிச்சி.

கடைசியா விமானத்தில இருந்தவனைப் பாத்து கேட்டாரு முனிவர்,”ஏம்பா உன் கருத்து என்னன்னு”, அதுக்கு அவன்,”தெரியலயே சாமின்னு”, சொன்னான்.

இந்த மொற அவன அந்த விமானம் கீழ தள்ளல. இரண்டு பேரையும் சொமந்துகிட்டு பயணம் செய்ய ஆரம்பிச்சிது.

இந்த கதை சொல்லவரும் கருத்து என்ன தெரியுமா? இந்த வாழ்க்கையில் நமக்குத் தேவையான விஷயங்களை மட்டும் தெரிந்துகொண்டால் போதும். தெரியாத விஷயங்களை தெரிந்துகொள்ள முயற்சிப்பது அல்லது தெரிந்த மாதிரி கருத்து சொல்வது முட்டாள்தனம்.

தெரியாத விஷயங்களை தெரியாதுன்னு ஒத்துக்கிறது தான் உத்தமம்.



www.gyanaguru.com

# 100 ஆண்டுகள் வாழ ஆசையா..?

எல்லா மனிதருக்கும் நீண்ட நாட்கள் வாழ்வதுதான் ஆசையாக இருக்கிறது. வயது முதிந்தாலும், நோயால் அவதிப்பட்டாலும், இன்னும் கொஞ்சநாள் வாழ்ந்து பார்க்கும் ஆசை மட்டும் குறைவதே இல்லை. உடல் ரகசியம் அறிய ஞானகுருவை சந்தித்தாள் சகுந்தலா. கல்லூரி பேராசிரியை, விரைவில் ஓய்வு பெறப் போகிறவள். மரண அச்சம் வந்ததாலோ என்னவோ, 100 ஆண்டுகள் என்னால் வாழ முடியுமா என்று கேட்டாள்.

புன்னகையுடன் பேசத் தொடங்கினார் ஞானகுரு. ”சுவாரஸ்யமான ஒரு கதை கேட்டிருப்பாய். மனிதகுலத்தின் மரணம் குறித்து சித்திரபுத்திரர், பறை அடிப்பவரிடம், ’பூவிருக்க, பிஞ்சிருக்க, காயிருக்க, கனி உதிர’ என்று அறிவிக்கச் சொல்லிக் கட்டளையிடுவார். ஆனால் பறை அடிப்பவரோ, ’பூவுதிர, பிஞ்சுதிர, காயுதிர, கனியுதிர’ என்று மாற்றி அறிவிப்பு செய்துவிடுகிறார். மரண அறிவிப்பு மாற்ற முடியாதது என்பதால் அன்றுமுதல் ,தாயின் கருப்பையில் உருவாகும் கருவில் துவங்கி, அனைத்து வயதினருக்கும் மரணம் வருவதாக சித்திரபுத்திர நயினார் கதை சொல்கிறது.

இந்த கதை சொல்லும் ரகசியம் என்னவென்றால், மரணம் எந்த நேரத்திலும், யாருக்கும், எப்படியும் வரலாம் என்பதுதான். இந்த உடல் ரகசியம் அறிவதற்கு முன்பு மனிதன் படைத்த பொருட்களின் ஆயுள் ரகசியத்தை அறிந்துகொள். ஒரே மாதிரியான மூலப்பொருள் கொண்டு, ஒரே மாதிரியான இயந்திரங்கள் கொண்டு, ஒரே மாதிரி செயலாக்கத்தில் உருவாக்கப்படும் கார் 25 ஆண்டுகள் உழைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அத்தனை கார்களின் ஆயுளும் ஒரே அளவு இருப்பதில்லை. ஏன் தெரியுமா?

காருக்கு போடும் பெட்ரோல், கார் ஓட்டும் விதம், ஒரு நாளைக்கு கார் ஓடும் நேரம், ரோட்டின் தரம் போன்ற பல்வேறு விஷயங்கள் அதன் ஆயுளை நிர்ணயம் செய்கின்றன. எதிர்பாராமல் நிகழும் விபத்து காரணமாகவும் காரின் ஆயுள் குறைந்துவிடும். இதுபோன்றுதான் மனித உடலின் ஆயுளையும் நிர்ணயம் செய்வதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

உன்னுடைய பெற்றோர் கொடுத்த ஏதாவது ஒரு பரம்பரை நோய் உடலில் இருந்தால், நீ எத்தனை விழிப்புடன் கவனித்தாலும் 100 ஆண்டுகள் வாழ முடியாது பெண்ணே… அதனால், வாழும் வரை நிம்மதியாக சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று மட்டும் ஆசைப்படு, 100 ஆண்டுகள் என நிர்ணயித்து கஷ்டப்படாதே…” என்றதும் சிந்தனையில் விழுந்தாள் சகுந்தலா.




www.gyanaguru.com



# குழந்தைக்கு நல்ல பெயர் சூட்டணுமா?

குழந்தை பெற்றெடுப்பதைவிட, அந்த குழந்தைக்கு பெயர் சூட்டுவதற்குத்தான் இன்றைய பெற்றோர் மிகுந்த அக்கறையும், சிரமமும் எடுத்துக்கொள்கிறார்கள். ஆனாலும், எல்லா குழந்தைகளும் பெயர் மூலம் வெற்றி அடைந்துவிடுவதில்லையே அது ஏன்..? ஞானகுருவிடம் கேள்வியை வீசினார் மகேந்திரன்.

புன்னகை சிந்தியபடி பேசத் தொடங்கினார் ஞானகுரு. நீ பெயர் வைப்பதால் மட்டும் எதுவும் மாறிவிடப் போவதில்லை. நீ மல்லிகை என்று பெயர் சூட்டியதால்தான், மல்லிகைப் பூக்கள் அத்தனை மணம் பரப்புகிறதா..? பெயர் என்பது வெறுமனே அடையாளம் காண்பதற்கான ஏற்பாடு, அவ்வளவுதான்.

மனிதனைத் தவிர எந்த உயிரினமும் பெயர் சூட்டிக்கொள்வதில்லை. மேலும் பெயரை வைத்த பெற்றோர்களே அதனை பெரிதாக மதிப்பதில்லை. குட்டி, செல்லம், தம்பி, லட்டு, பாப்பா என்று குழந்தையாக இருக்கும்போது செல்லமாக அழைப்பார்கள். அதன்பிறகு பள்ளியில் ஒரு பட்டப்பெயர் கிடைக்கும். வளர்ந்ததும் மாமா, சித்தப்பா, மதினி, அக்கா, அண்ணன் என்று உறவுச் சொல் கிடைத்துவிடும். வேலைக்குப் போனதும் மேனேஜர், கிளர்க், சூப்பர்வைசர் என்பதுதான் பெயராக அழைக்கப்படும்.

வயதாகிவிட்டால் பெருசு, தண்டம், கிழடு என்பதுதான் அடையாளமாகிவிடும். ஒரு முக்கியமான விஷயம் தெரியுமா? உன் உடல் அழிவதற்குள் உன் பெயர் அழிந்துவிடும் என்பதுதான். ஆம், நீ செத்தவுடன் உன்னை யாரும் பெயர் சொல்லி அழைக்க மாட்டார்கள்.

பாடி எப்ப வரும்..? பாடிய எப்போ எடுப்பீங்க? என்றுதான் கேட்பார்கள். அதுவரை நீ உபயோகப்படுத்திய ஆடை, பாய், படுக்கை எல்லாம் குப்பைக்குப் போய்விடும். அதன்பிறகு நீ திரும்பிவந்தால் பேய், ஆவி என்றுதான் அழைக்கப்படுவாய்.

அதனால், உன் பெயர் நல்லதா அல்லது சரியில்லையா என்று கவலை கொள்ளாதே. எல்லா பெயரும் தற்காலிக அடையாளம்தான். அது, எதுவாக இருந்தால்தான் என்ன..? என்று சிரித்தார்.

இப்போது மகேந்திரனுக்கு முகத்தில் தெளிவு வந்தது..




# மனம் விட்டு பேசலாம் வாங்க

மகிழ்ச்சியை மனதார ஏற்றுக்கொள்வது போல், வாழ்வின் துன்பத்தையும் சில நேரங்களில் மனதார ஏற்கத்தான் வேண்டும். காலம் எல்லா துன்பங்களையும் துடைத்து தள்ளிவிடும் என்றாலும், அதுவரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆம், துன்பத்தில் இருப்பவர்கள் மனம்விட்டுப் பேசுவது ஓர் எளிய தீர்வு.

எல்லோருக்கும் துன்பத்தை கொட்டித் தீர்ப்பதற்கு தாயின் தோள்கள் கிடைத்துவிடு வதில்லை. உங்கள் சோகங்களைக் கேட்பதற்கும் ஆறுதல் சொல்வதற்கும் ஞானகுரு மையம் இருக்கிறது.

உங்கள் மனதில் இருக்கும் அத்தனை பாரங்களையும் இறக்கி வைக்க வாருங்கள். ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு கட்டணம் உண்டு.

உங்கள் தேவைக்கு தொடர்புகொள்ளுங்கள்...





## ஞானகுரு மகிழ்ச்சி

**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல், **நிர்வாக மேலாளர் :** எம்.நிலா

**வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ், கே.எம்.பிரசன்னா

ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜுனா நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112 **மெயில் :** skmnila1@gmail.com